சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 6 | இதழ்: 02 | ஜூலை - 2024 | விலை - ரூ.15/
VOL:6 | ISSUE: 02 | JULY - 2024 | Rs. 15/-



வேதநாயகர் வியாசர்

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-6 மலர்- 02 ஜூலை - 2024

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே...

உனக்கு ஏற்படும் பிரச்சனையை நினைத்து, நினைத்து, உன் நிம்மதியை தொலைத்துக் கொண்டு இருக்கிறாய் உனக்கு ஒரு விஷயம் பிடிக்கவில்லை என்றால் அவற்றின் நினைப்புகளை அறவே அழித்துத் துடைத்துவிடு,

உனக்கு பிடித்த மாதிரியே எல்லாரும் இருக்க மாட்டார்கள், நீ அதிகம் நம்பி பழகிய சிலர் உனக்கு நம்பிக்கை துரோகம் செய்திருக்கலாம். அவர்கள் செய்யும் சில செயல்கள் உனக்கு வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அது உனக்கு பிடிக்கவில்லை என்றால், அதனை சொல்லி சண்டை போடாமல் அமைதியாக விலகுவது நல்லது.

கோபத்தையும் எரிச்சலையும் விட்டு விடு. ஒருவர் உன்னை காயப்படுத்தியது நியாயம் இல்லை தான்,அதற்காக அந்த கோபத்தை மற்றவர்களிடம் காண்பித்தால் அவர்களுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்?

நிச்சயம் நீ நிம்மதியுடனும், சந்தோஷத்துடனும் வாழ்வாய் அதற்கு நானே பொறுப்பு, அதற்கான எல்லாம் முயற்சியில் உன்னை நான் ஈடுபடுத்தி வெற்றி பெற வைப்பேன். நானே துணை நின்று உன்னைக் காப்பேன்.

-பகவான் சீரடி சாய்பாபா.

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் எழுபத்தி இரண்டாவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 02.06.24 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு "சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தில்" (17/7A, பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை 23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் தொடங்கிய விழா தியானம், பஜனை எனத் தொடர்ந்தது. காலை 10 மணிக்கு இம்மாத இதழ் வெளியீட்டுவிழா நிகழ்ந்தது. இம்மாத இதழை, அயனாவரம் ஸ்ரீலஸ்ரீ நித்தியானந்தம் சுவாமிகளின் குமாரர் திரு. தியாகு அவர்கள் வெளியிட, பாண்டிச்சேரி சாயி பக்தர், திரு. சந்திரசேகரன் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.





திரு. தியாகு அவர்களும், திரு. சுந்தர் சாய் அவர்களும், திரு அகஸ்டின் அவர்களும், பக்தரிடையே சொற்பொழிவாற்றினார்கள். புத்தக வெளியீட்டை முன்னிட்டு இல்லாதோருக்கும், இயலாதோருக்கும் அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

பெங்களூர் திருமதி. நீலம் குமார் அவர்கள் "பாராயணப் பகலவன்" திரு. சுந்தர் சாய்ராம் அவர்களின் மூலமாக நமது ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான சபைக்கு சவுண்ட் சிஸ்டம் ஒன்றை காணிக்கையாக அனுப்பியுள்ளார்கள். அவர்களுக்கும்,





அவர்களது குடும்பத்தினர் அனை வருக்கும் பகவான் சாயிநாதரின் பரிபூரணமான ஆசீர்வாதம் கிடைக்க பிரார்த்திக் கின்றோம்.

மதுரை ஒத்தக்கடை, யோக தரிசன சீரடி ஸ்ரீ சாய்பாபா பிரார்த்தனை இல்ல பாபாவிற்கு நமது இதழை மாலையாக அணித்து அழகுபார்த்த ஆலய நிர்வாகிகளுக்கு எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

பக்தர்கள், பாபாவின் ஆலயங் களுக்கு செல்லும் போதும், அவர்கள் அங்கு தங்கியிருக்கும் வரை அவர்களின் இதயங்களில் அமைதியும் நல்லிணக்கமும் இருக்கிறது. ஆனால், அவர்கள் தங்கள் வசிப்பிடத்திற்குத் திரும்பும் போது, அதை அனுபவிப்பது கடின மாக இருக்கிறது. ஏன் அப்படி? இதற்கான தீர்வுதான் என்ன?

பக்தர்கள் ஆலயத்திற்கு செல்வது அழுத்தமான பிரச் சினைகளில் இருந்து ஆறுதலும் நிவாரணமும் பெறுவதற்கே. அந்த மகிழ்வான அனுபவத்தை மீண்டும் பெறுவதற்காக பக்தர்கள் அங்கு செல்ல வேண்டும் என்ற தூண்டுதலைப் பெறுகிறார்கள்.

ஆலயத்தில் இருக்கும் போது "நான்", "எனது" என்ற ஆதிக்கம் குறைவாக இருப்பதால், அவர்கள் அங்கு தங்கியிருக்கும் போது, இயல்பாகவே மனம் அமைதியை அனுபவிக்கிறது.

ஆனால் தங்களுடைய வருகையின் நோக்கம் மேற்கண்ட கட்டுக்களை தங்கள் மனதில் இருந்து அழிப்பதே என்பதை அவர்கள் ஆலயத்தில் தங்கியிருக்கும் நேரத்தில் நினைவில் கொள்வது குறைவாகவே இருக்கிறது.

இதன் விளைவாக, அவர்கள் ஆலயத்தை விட்டு தங்கள் இருப் பிடத்திற்கு செல்லும்போது, சக மனிதர்களிடம் பழகும் விதத்தில் அவர்களின் அணுகுமுறையில் எந்த மாற்றமும் ஏற்படாமல் இருக்கிறது. எனவே அவர்கள் ஆலயத்தில் இருந்து திரும்ப வீட் டிற்கு செல்லும் போது, அவர்கள் ஆலயத் திற்கு எடுத்துச் சென்ற பிடிவாத எண்ணங்கள் மீண்டும் பழையபடி எழுகிறது.



மேலும் ஆலயத்தில் உறையும் மகானின் நோக்கத்தை அறிந்து அவர் நம்முன் வைத்த இலட்சியத்தை நோக்கி பயணிக்க எந்த ஒரு முயற்சியும் செய்யப்படுவதில்லை. நமது ஆலய வருகை நம்மை சுய முன்னேற்றப் பாதையில் ஈடுபடுத்தி, குருநாதர் சாயிபாபா நிர்ணயித்த இலக்கை நோக்கி நம்மை நகர்த்துகிறது என்பதை துரதிர்ஷ்ட வசமாக நாம் மறந்து விடுகிறோம்.

ஆலயம் என்பது உலகளாவிய அன்பையும் சேவையையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு பள்ளிக்கூடம். அங்கு நிகழும் அறிவுரையை பக்தர்கள் கேட்காத வரை, மாற்றம் என்பது ஏற்படாது.


தேடுபவர் மற்றும் தேடுதலுக்குப் பின்னால் உள்ள ஆற்றல் அவர்களுக்கு உள்ளேயே இருக்கிறது என்பதை படிப்படியாக உணர்ந்து கொள்வதே ஆலயத்திற்கு வரும் ஒவ்வொருவரின் இறுதி நோக்கமாகவும் இருக்க வேண்டும்.

ஆலயங்கள் அனைவரின் கருத்திற்கும் செவிசாய்த்து இடமளிக்க வேண்டும். அன்புடனும், சிறப்புடனும், அர்ப்பணிப்புடனும், நன்றியுடனும் பக்தர்களை கையாள வேண்டும். இவைகள் ஆலயத்தில் நடைபெறா விட்டால் பக்தர்கள், ஆலயத்திற்கு வருகை புரிந்த நோக்கம் ஒருபோதும் பலனளிக்காது.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மனநிம்மதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்.



பரமாத்மாவான இறைவனை ஜீவாத்மாவான மனிதன் எப்படி கண்டறியவேண்டும் என்பதை விளக்குவது தான் வேதம்.

இறைவனை மந்திரங்களாக துதித்து வழிபடும்படி வழிகாட்டுவது ரிக்வேதம். மனிதன் தன் ஆயுளில் செய்ய வேண்டிய சடங்குகள், அதற்கு தேவையான உபகரணங்கள், ஆட்சியில் இருப்பவர்கள் செய்ய வேண்டிய யாகங்கள் ஆகியவை பற்றி தெரிவிப்பது யஜுர் வேதமாகும்.

வேதநாயகர் வியாசர்

பரதகண்டம் என பெயர்பெற்ற இந்த புண்ணிய பூமியில் பல சான்றோர்கள் இருந்திருக்கின்றனர். அவர்களின் தலை சிறந்தவராக வியாசர் கருதப்படுகிறார்.

அவர் இந்த மண்ணுலகில் வாழ்ந்த காலத்தில் அறநெறியையும், ஆன்மிக தத்துவத்தையும் உலகிற்கு வழங்கியவர்களில் முதன்மையானவராக இருந்தார்.

எல்லாவற்றிற்கும் ஆதாரமான வேதத்தில் சொல்லியுள்ளபடி கலியுகத்தில் பக்திமார்க்கம் குறைந்து நசித்து போகாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரே வடிவாக இருந்த வேதத்தையும், அதன் சிதறிக்கிடந்த பாகங்களையும் தொகுத்து ரிக் வேதம், யஜுர் வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என நான்காக பிரித்தார்.

பாடல்களால் இறைவனை துதிப்பது சாம வேதம் ஆகும். இதனால்தான் இசையில் சாம காணம் என்ற பிரிவு உருவாக்கப் பட்டிருந்தது. மந்திர தந்திரம், மருத்துவம், சக்தி, வழிபாடு ஆகியவை பற்றி விளக்குவது அதர்வண வேதம்.

இவற்றை தொகுத்து மக்களுக்கு அளித்ததன் மூலம் அவர் வேத வியாசர் எனப்பட்டார். "வியாசர்" என்ற சொல்லுக்கு தொகுத்தவர் என பொருள்.

இந்த வேதங்களில் ரிக் வேதத்தை சுமந்து என்ற மகரிஷியிடமும், யஜுர் வேதத்தை வைசம் பாயணரிடமும், சாம வேதத்தை ஜைமினி முனிவரிடமும், அதர்வண வேதத்தை பைலரிடமும் ஒப்படைத்து அவற்றைக் கற்று மற்றவர்களுக்கு கற்பிக்கும்படி செய்தார்.

வேதங்களின் கருத்துக்களை உள்ளடக்கி 18 புராணங்களாகவும், மகாபாரதமாகவும் உருவாக்கினார். அதை சூதம் என்ற முனிவருக்கு உபதேசித்தார். சூதர் அதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் பணியைச் செய்தார்.

மகாபாரதத்தில் ஒரு பாத்திரமாகவும் வியாசர் தன்னை மாற்றிக்கொண்டார். வியாசரின் தாய் சத்தியவதி. இவள் ஒரு மீனவப் பெண். அவளின் தந்தை, சத்தியவதிக்கு பரிசல் ஓட்ட கற்றுத் தந்தான்.

ஒருமுறை பராசர முனிவர் என்பவர் அந்தப் பரிசலில் பயணம் செய்தார். அந்த நேரம் இந்த உலகில் ஒரு மகாபுருஷன் தோன்ற வேண்டிய நல்ல நேரம். அந்த மகாபுருஷனை கலியுகம் முடிந்து, இந்த உலகம் அழியும் வரை மக்கள் மறக்க மாட்டார்கள்.

அவன் எழுதப் போகும் காவியம், படித்தவன், படிக்காதவன் என எல்லார் மனதிலும் நிலைத்து நிற்கும் என்பதை பராசரர் உணர்ந்திருந்தார். பராசரர் அந்தப் பெண்ணிடம், நாம் இப்போது ஒன்று சேர்ந்தால் உலகம் போற்றும் உத்தமன் ஒருவன் பிறப்பான் என்றார்.

சத்தியவதியும் சம்மதித்தாள். இருவருக்கும் மகனாய்ப் பிறந்தார் வியாசர். அவர் மிக மிக கருப்பாக இருந்ததால் கிருஷ்ண துவைபாயனர் என்று பெயரிட்டனர். கிருஷ்ணா என்றால் கறுப்பு, துவைபாயனர் என்பது அவர் பிறந்த இடத்தை குறிக்கும்.

வியாசர் தன் தாயிடம், தான் துறவறம் செல்வதாகக் கூறினார். மகனைப் பிரியும் போது தாய் சத்தியவதி, எதாவது ஒரு இக்கட்டான நிலை வந்தால் நான் உன்னை நினைப்பேன். அப்போது நீ வந்து எனக்கு உதவ வேண்டும், என்றாள்.

வியாசரும் அதற்கு ஒப்புக் கொண்டார். இதனிடையே குருவம்சத்து அரசன் சந்தனுவுக்கு பீஷ்மர் பிறந்தார்.ஒரு சந்தர்ப்பத்தில், பராசரருடன் கூடி வியாசரைப் பெற்ற சத்தியவதியை சந்தனு சந்திக்க நேர்ந்தது. அவள் மீது ஆசைப்பட்டு அவள் இல்லாமல் தான் வாழ்வது அரிது என்று முடிவெடுத்தான்.

தந்தையின் துன்பத்தைப் போக்க பீஷ்மர் கடும் முயற்சியெடுத்து அவளையே தன் தந்தைக்கு திருமணம் செய்து வைத்தார். அவளுக்குப் பிறக்கும் குழந்தையே நாடாளும் என சத்தியம் செய்தார். அத்துடன் தானும் இனி திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என சபதம் எடுத்தார்.

தந்தைக்காக தன் வாழ்க்கையையே துறந்து துறவி போல் வாழ முடிவெடுத்தார். சந்தனுவுக்கும், சத்தியவதிக்கும் சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்னும் மக்கள் பிறந்தனர்.

இவர்களில் சித்திராங்கதன் ஒரு போரில் கொல்லப்பட்டான்.

விசித்திரவீரியன், காசி மன்னனின் மகள்கள் அம்பிகா, அம்பாலிகா ஆகியோரை மணந்தான். அவனும் திருமணமான சில ஆண்டுகளிலேயே குழந்தை எதுவும் பிறப்பதற்குள் இறந்தான்.

இப்போது அந்தக் குடும்பத்தில் எஞ்சியது பீஷ்மர் மட்டுமே. வேறு வழி இல்லாததால் பீஷ்மரை பட்டம் சூட்டிக் கொள்ளக் கூறினாள் சத்தியவதி. ஆனால் தான் செய்த சத்தியத்தை மீற மாட்டேன் எனக் கூறிவிட்டார் பீஷ்மர்.

நாடாள வாரிசு இல்லாத நிலையில், தன் மகன் வியாசரை நினைத்தாள் சத்தியவதி. தாயின் உணர்வுகளை புரிந்து கொண்டு அங்கு தோன்றினார் வியாசர். அவரிடம், சான்றோனாகிய நீ, நாட்டின் நலன் கருதி, உன் தமையனின் மனைவியருடன் கூடுவதில் தவறில்லை. அவர்களோடு கூடி குழந்தைகளைப் பெறுவாயாக, என்றாள்.

அம்பிகாவும், அம்பாலிகாவும் இதற்கு சம்மதித்தாலும், கரிய நிறமுடைய, தாடியும், ஜடாமுடியும் கொண்ட வியாசரை இருவரும் விரும்பவில்லை. இருப்பினும் மாமியாரின் விருப்பத்தை நிறைவேற்ற கண்ணை மூடிக் கொண்டு, வியாசருடன் ஒன்று சேர்ந்தாள் அம்பிகா. இதனால் அவளுக்கு ஒரு குருட்டு மகன் பிறந்தான். அவனுக்கு திருதராஷ்டிரன் என பெயர் சூட்டினர்.

இன்னொரு பெண்ணான



அம்பாலிகா வியாசரின் உருவத்தை கண்ட மாத்திரத்தில் முகம் வெளுத்தது. அவள் வெளுத்த முகம் கொண்ட ஒரு மகனைப் பெற்றாள். அவன் பாண்டு எனப்பட்டான். அம்பிகாவுக்கு குருட்டு மகன் பிறந்ததால், இன்னும் ஒரு மகனைப் பெற அம்பிகாவைக் கேட்டுக் கொண்டாள் சத்தியவதி.

ஆனால், அம்பிகா வியாசருடன் சேர விரும்பாமல், தனக்கு பதிலாக தன் தாதி ஒருத்தியை அனுப்பி விட்டாள். அவள் வியாசருடன் மனம் உவந்து, அவரது தவவலிமையை மட்டும் நினைத்து கூடினாள். அவளுக்கு விதுரன் என்ற மகன் பிறந்தான்.

இப்படி பாரதக் கதையை துவக்கி வைத்தவரே வியாசர் தான். இவ்வகையில் அவர் பாண்ட


வர்களுக்கும் கவுரவர்களுக்கும் தாத்தா ஆகிறார்.

வேதங்களில் உள்ளடங்கி உள்ள தத்துவங்களை சுருக்கமாக மனிதன் புரிந்து கொள்ளும் வகையில் பிரம்ம சூத்திரம் எனப்படும் வேதாந்த சூத்திரங்களாக உருவாக்கினார். இது வியாச சூத்திரம் என்று அழைக்கப் படுகிறது.

ஆதிசங்கரர், ராமானுஜர், மத்து வர் ஆகியோர் பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கவுரை எழுதியுள்ளார்கள்.

தனது நுண்ணறிவால் மனித குலத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கினார். இந்து மதத்தின் ஆதி குருவாக வேதவியாசர் போற்றப் படுகிறார்.

இவர் ஆஞ்சநேயரைப் போல சிரஞ்சீவி பட்டம் பெற்றவர். சிரஞ்



சீவி என்றால் என்றும் வாழ்பவர் என பொருள். கலியுகம் தோன்றி எவ்வளவோ ஆண்டுகளாகி விட்ட போதிலும் வியாசரின் மகாபாரதம் இன்றும் மக்களுக்கு வேதம் போல் விளங்குகிறது.

அதில் கூறப்பட்டுள்ள ஒழுக் கத்தை பின்பற்ற வேண்டுமென உபன்யாசகர்கள் வற்புறுத்தி வரு கின்றனர். இதன் காரணமாக ஒவ் வொரு ஆண்டும் ஆனி பவுர்ணமி அன்று குருவை வணங்க வேண்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

வடமாநிலங்களில் ஆனி பவுர்ணமியை குரு பூர்ணிமா என சிறப்பாக கொண்டாடுகின்றனர். ஞானத்தை உணர்ந்துவதால் குரு பரம்பொருளாக சொல்லப் படுகிறார். மாதா, பிதா, குரு, தெய் வம் என்ற வரிசையில் தந்தைக்கு அடுத்தபடியாக குருவே வருகிறார்.

அன்னை மீது கொள்ளும் பக்தியால் இப்பிறவியில் இன்பம் பெறலாம். தந்தை மீது கொள்ளும் பக்தியால் மறுபிறவியில் இன்பம் பெறலாம். குரு பக்தியால் பிறப்பற்ற நிலையை எய்தலாம்.

ராமர், கிருஷ்ணர் போன்ற அவதார புருஷர்களாக இறைவன் அவதரித்த போது அவர் கூட ஒரு குருவிடம் தீட்சை பெற்றதாக புராணங்கள் சொல்கின்றன.

எனவே அன்பர்கள் ஆனி மாதத்தில் வரும் பவுர்ணமி அன்று உங்களது குருவினை தொழுது பணிந்து அருள் பெறுங்கள். வாழ்க வளமுடன், வாழ்க வையகம்.

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம்- 4

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா

தர்மம் அழிந்து அதர்மம் தலை எடுக்கும் போதெல்லாம் என்னை நானே அவதரித்துக்கொள்கிறேன் நல்லோரைக் காத்து, தீயோரை அழிக்க யுகந்தோறும் அவதரிக் கின்றேன் என்று கீதையில் கண்ணன் பிரான் கூறுகிறார்.



இதுவே இறைவனின் அவதார நோக்கம். இறைவனின் சார்பாக, ரிஷிகளும், ஞானிகளும், மகான்களும் தக்க தருணத்தில் தோன்றி, அவதாரத்தின் நோக்கம் நிறை வேறு வதற்காக தமக்கே உரித்தான முறையில் உதவி செய்கிறார்கள்.

மனிதர்களில் நான்கு பிரிவின ரும் தத்தமது கடமைகளை செய்யத் தவறி ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்தும்போதும் சமூகத்தில் நான் உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் என்று கீழ்த்தரமான கொள் கையை நடைமுறைப்படுத்த முயலும்போதும்,

ஆத்மஞான போதகர்கள் மதிக்கப் படாமல் அவமதிக்கப்படும் போதும்,

மக்கள் போதைப் பொருட்களில் மூழ்கும்போதும், மதம், இனம்,சாதி என்ற போர்வையில் மக்கள் தகாத காரியங்களை செய்யத் துணியும் போதும், யோகிகள் தியானத்தை புறக்கணிக்கும்போதும், மனைவி, மக்கள், செல்வமே நிலையானவை என்று கருதி, முக்தி என்னும் உண்மை வழியில் இருந்து வழி தவறிப் போகும் போதும், ஞானிகள் தோன்றுவார்கள்.

அந்த வகையிலே பாபாவும் சிர்டியில் தோன்றினார்.

மக்களின் பார்வைக்கே படாமல் மறைந்திருந்த பல கிராமங்கள் ஞானிகள் தோன்றி வசித்ததும், எவ்வாறு உலகம் முழுவதும் புகழ் பெற்று விளங்குகிறதோ, அவ்வாறே ஸ்ரீ சாய்நாத் சீர்டியில் தோன்றியதும்

சிர்டியும் உலகப்புகழ் பெற்று விளங்குகிறது.

மிகவும் கடினமான இக வாழ்வை அவர் எளிதாக வெற்றி பெற்றிருந்தார். சாந்தமே அவரது அணிகலனாக இருந்தது. விவேகத்தின் பெட்டகமாக விளங்கினார். வள்ளல்களுக்கெல்லாம் வள்ளலாக விளங்கினார். அவருக்கு அழியும் பொருட்களின் மீது எப்போதும் ஆசை இருந்ததில்லை. அவரது ஒரே சிந்தனையான ஆன்ம ஈடுபாட்டிலேயே லயித்திருந்தார்.

அவரின் உள்ளம் கண்ணாடியைப் போன்று தூய்மையானதாக இருந்தது. அவரின் மொழிகள் அமிர்தத்தை போன்றிருந்தது. இகழ்ச்சி, புகழ்ச்சி இவற்றை அவர் கொஞ்சமும் மதிக்கவில்லை.

நடிப்பையே தொழிலாகக் கொண்ட கிராமிய இசைக்கலைஞர்களின் நடிப்பையும், நாட்டியத்தையும் கண்டார். கிராமிய தெம்மாங்கு பாடல்களையும் கேட்டார். ஆனாலும், கொஞ்சமும் சமாதி நிலையிலிருந்து அவர் விலகியதில்லை. இவ்வுலகம் விழித்திருக்கும்போது அவர் தூங்கினார். தூங்கும் போது அவர் விழித்திருந்தார்.

அவரது இருப்பிடத்தை எளிதாக தீர்மானிக்க முடியாது. அவரின் செய்கைகளுக்கு நாம் அர்த்தம் கண்டுபிடிக்க முடியாது. அவர் ஒரே ஊரிலேயே வாழ்ந்தார். ஆனால் உலக நடவடிக்கை அனைத்தையும் அறிந்திருந்தார். தினந்தோறும் நூற்றுக்கணக்கான கதைகளைக் கூறுவார். ஆனாலும் மவுன விரதத்தில் இருந்து அவர் விலகியதில்லை.

காலை, மாலையில் லெண்டித் தோட்டம், சாவடியை நோக்கி நடந்து கொண்டிருந்தார். ஆனாலும் ஆன்ம உணர்வில் நிலைத்திருந்தார். அவர் முழு சித்தரானாலும், பயிற்சி பெறும் மாணவரைப் போன்று நடித்தார். பணக்காரர், ஏழை அனைவரும் அவருக்கு ஒன்றே! அவர் எளிமையாகவும், இனிமையாகவும்



அகங்காரம் இன்றி அனைவரையும் மகிழ்வித்தார்.

முக்கியமாக, அவரின் திருவாய் "அல்லாமாலிக்" என்ற திருநாமத்தையே உச்சரித்துக் கொண்டிருந்தது. தன்னை நாடிவந்த, சைவர்கள், வைஷ்ணவர்கள், இஸ்லாமியர்கள், கிருஸ்துவர்கள், பார்சிகள் அனைவரையும் அவர் ஒன்றுபோலவே முக்கியமாக, மனிதர்களாகக் கருதினார்.

அவர் மத இனங்களுக்கு அப்பார்ப்பட்ட பரம்பொருளேயாவார். குறைந்த அறிவுடைய நாம் தான் அவரை இந்த மதத்திற்கும், இனத்திற்கும் தலைவராவார் என்று குறை(ரை)த்து மதிப்பிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இவரே சிர்டி சாய்பாபா. பாபாவின் திருவடிகள் பட்டதால் சிர்டி அசாதாரணமான முக்கியத் துவம் பெற்றது.

சிர்டியின் புல்லின் அரும்புகளும், கற்களும், மண்ணும்கூட ஆசீர்வதிக்கப்பட்டவை. ஏனெனில் அவை எளிதாக சாயியின் திருவடிகளை முத்தமிட முடியும் திருவடித்தூளிகளை தமது தலையில் ஏந்திக்கொள்ள முடியும் அல்லவா?

சாயியின் பக்தர்களுக்கு சிர்டியே அனைத்துப் புண்ணிய நகரங்களும் ஆகும். ஸ்ரீசாயி நாதருடன் தொடர்பு கொள்வதே மந்திரமும், தந்திரமும், வேதமும் ஆகும். அதுவே இவ்வுலக உணர்வை தவிர்த்து தன்னுணர்வை எளிதில் வழங்கும். சாயிபாபாவின் தரிசனமே நமது யோக சாதனம்.

அவருடன் பேசுவது நமது பாவங்களை கழியச்செய்யும். அவரின் திருவடிகளுக்கு நறுமண எண்ணை தேய்த்து பிடித்துவிடுவதே நமது புனித நீராடல். அவரது திருவடித் தீர்த்தத்தை அருந்துவதால் நமது பிறவிப்பெருங் கடன் தீரும். அவரின் உதியை உண்பதுவே நமது நோய்களைத் தீர்த்து உடலை தூய்மையாக்கும்.

சாயிபாபாவின் பெற்றோர், பிறந்த ஊர், இடம் இவற்றைப்பற்றி ஒருவருக்கும் தெரியாது. பாபாவிடமும், மற்றவர்களிடமும் பல கேள்விகள் கேட்கப்பட்டன. பல விசாரணைகள் செய்யப்பட்டன.

ஆனால் பதிலோ, செய்தியோ இதுவரை கிடைக்கவில்லை.

சாயிபாபா மக்களை உய்விக்கும் பொருட்டு சிர்டி என்ற கிராமத்தில் உள்ள வேப்பமரத்தடியில் 16 வய துடைய இளைஞனாக மக்கள்முன் தோன்றினார். அப்போதே பிரம்ம ஞானம் அறிந்தவராக காணப்பட்டார்.

பாபாவை 16 வயது இளைஞ னாக வேப்பமரத்தடியில் முதன் முதலாகப் பார்தத, சீரடியைச் சேர்ந்தவரும், நாநா சோப்தாரின் தாயாருமாகிய ஒரு பாட்டி, தான் பார்த்த விதத்தை விவரிக்கிறார். அழகும், சுறுசுறுப்பும் மிகுந்த இவ்விளைஞன் வேப்பமரத்தடியில் கால்களை மடக்கி பத்மாசனத்தில் அமர்ந்திருந்தான்.

ஊருக்கு புதிதாய் இருக்கும் இவன் யாராக இருக்கும், எங்கிருந்து வந்தான் என்று நானும் எனது தோழிகளும் அக்கம்பக்கத்தில் விசாரித்தோம். ஒருவருக்கும் தெரிய வில்லை. அவன் யாராயிருந்தால் என்ன? அவனது தெய்வீகமான ஒளி பொருந்திய திருமுகத்தை பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும் போல் அல்லவா இருக்கின்றது.

நாளும் பொழுதும் எப்படி யாவது ஒரு முறையாவது அவ்விளைஞனை வேப்பமரத் தடியில் நானும் ஊர் மக்களும், பார்த்துக்கொண்டே இருந்தோம். இளம் வயது உடைய அந்த யோகி ஒரு போதும் வேப்பமரத்தை விட்டு அகலவேயில்லை.

பகலில் சுடெரிக்கும் வெய் யிலையோ, இரவில் நிலவும் கடும் குளிரையோகூட பொருட்படுத்தாது கண்களை மூடி நிஷ்டையில் இருக்கும் இளைஞனைக் கண்டு நானும், ஊர் மக்களும் பெரிதும் ஆச்சர்யப்படடோம். அவன் பகலில் ஒருவருடனும் பேசுவதில்லை. இரவில் ஒருவருக் கும் அஞ்சுவதில்லை.

அவன் ஒருவர் வீட்டிற்கும் செல்வதில்லை. சாப்பிடிற்கு என்ன செய்கின்றான். அவன் சாப்பிடுகின் றானா, இல்லையா ஒன்றுமே புரியவில்லை. ஆனால் அவன் யாரையாவது ஒரு முறை திரும்பிப் பார்த்தால் போதும். அவன் மீது அன்பு கொள்ளும் அளவிற்கு அவனுடைய உருவாம்சம் ஒளி பொருந்தியதாக இருந்தது.

அவன் வெளித்தோற்றத்திற்கு இளைஞனாகத் காணப்பட்டான். ஆயினும் அவனது செய்கைகள் பிரம்மத்தை ஒத்திருந்ததன. அவனிடம் வேண்டுதலும் இல்லை, வேண்டாமையும் இல்லை. ஊர் மக்கள் அனைவருக்கும் அவன் ஓர் மர்ம மனிதானாக இருந்தான்.

ஓர் நாள் ஊர் பெரியவர் கள் அனைவரும் கூடி அவ்விளை ஞனிடம் விசாரிக்கலாம் என்று வேப்ப மரத்தடிக்கு வந்தார்கள். அப்போது அவர்களில் ஒருவருக்கு, எங்கள் ஊர் காவல் தெய்வம் "கந்தோபா" சாமி வந்தது விட்டது. உடனே அனைவரும் சாமியிடம், "தெய்வமே இவ்விளைஞன் யார்? அவனது ஊர் என்ன? பேர்

என்ன? தாய் தந்தையர் யார் என்று கூறும்படி கேட்டனர்.

கண்டோபா சாமி அவர்களை ஒரு மண்வெட்டி கொண்டு வரச்சொல்லி, வேப்பமரத்திற்கு அருகில் ஓர் இடத்தை சுட்டிக்காட்டி, இங்கு தோண்டுங்கள் அவன் யாரென்று நான் கூறுகிறேன் என்று கூறியது. மக்கள் அவ்விடத்தை மண்வெட்டியாலும், கடப்பாரையாலும் தோண்டினர்.



சில அடிகள் தோண்டப் பட்டதுமே செங்கற்கள் காணப் பட்டன. அதற்கடியில் சமதளக்கல் ஒன்று இருந்தது. அதையும் அகற்றியபின், ஒரு நிலைக்கதவு தெரிந்தது. கதவை அகற்றியதும் நிலவறைக்குச் செல்லும் படிகள் தென்பட்டன. மக்களில் ஒருவனை உள்ளே இறங்கி பார்க்கச் சொன்னார் கந்தோபாசாமி.

உடனே ஒருவர் உள்ளே இறங்கிப் பார்க்க, என்ன ஆச்சர்யம் அங்கே நான்கு அகல் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அதன் அருகே ஜபம் செய்யும் பசுமுகம் பொறிக்கப்பட்ட பைகள், ஜபமாலைகள், மரப்பலகைகள் முதலியவை காணப்பட்டன.

உடனே கந்தோபா சிறிது நேரம் சாமியாடிவிட்டு, "இவ்விளைஞன் இங்கு பன்னிரெண்டு ஆண்டுகளாக தவம் புரிந்து கொண்டிருந்தான்" என்று கூறி மலையேறியது. ஊர் மக்கள் இளைஞனை மரியாதையுடன் பார்க்கத் துவங்கினர். ஆனாலும், மக்கள் அனைவரும் கந்தோபா கூறிய செய்தி உண்மையா என்று அதையே திரும்ப திரும்ப இளைஞனிடமே கேட்கத் துவங்கினர்.

அவன், ஊர் மக்களை திசை திருப்பும் பொருட்டு, அது தன்னுடைய குருவின் சமாதி என்றும் அவ்விடத்தை நன்கு பாதுகாக்கும்படியும் வேண்டிக் கொண்டான். மேலும், யார் இவ்விடத்தை சுத்தம் செய்து விளக்கு ஏற்றி வணங்குகிறார்களோ அவர்களுக்கு என் குரு சகல சௌபாக்கியங்களையும் அருள்வார் என்றும் கூறினான்.

உடனே, ஊர் மக்கள் நிலவறையை முன்பு இருந்ததைப் போன்றே மூடி அந்த இடத்தை சுத்தம் செய்து விளக்கு ஏற்றி வழிபட்டனர். இருப்பினும் இளைஞன் விசேஷ சக்தி படைத்தவன் என்பதை கந்தோபாவின்

மூலம் உணர்ந்த மக்கள் அவனை சும்மா இருக்க விடவில்லை. நேரம்காலம் இல்லாது லௌகீக மான விசயங்களுகாக அவனை தொந்தரவு செய்ய ஆரம்பித் தனர்.

இம்மாதிரியான செய்கைகள் தனது தவத்திற்கு இடையூராக இருப்பதாக எண்ணிய இளைஞன் திடீரென ஒரு நாள் சிர்டியில் இருந்து எங்கோ காணாமல் போய் விட்டான்.

சில வருடங்களுக்குப் பிறகு...

ஔரங்காபாத் ஜில்லாவில் லுள்ள "தூப்" என்ற கிராமத்தில் சாந்த்பாடீல் என்ற வசதியான இஸ்லாமியர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஔரங்காபாத் திற்கு சென்று கொண்டிருந்தபோது அவரது குதிரையை தொலைத்து விட்டார். இரண்டு மாதங்களாக தேடியும் அவரால் அக்குதிரையை கண்டுபிடிக்க முடியவில்லை.

மிகுந்த ஏமாற்றதுடன், சேணத்தை தன் தோளில் போட்டுக் கொண்டு ஔரங்காபாத்திற்கு திரும்பிச் சென்று கொண்டிருந்தார். வெகுதூரம் பிரயாணம் செய்து விட்டு ஒரு மாமரத்தின் அடியில் சற்று ஓய்வெடுக்கலாம் என்று சென்றார். ஆனால் அங்கே அவருக்கும் முன்பு ஒரு விசித்திர மனிதர் அமர்ந்திருந்தார்.

அவரது தலையில் குல்லாய் அணிந்திருந்தார். கஃப்னி என்னும் நீண்ட ஆடையை உடுத்தியிருந்தார். கையில் குட்டையான ஒரு தடி வைத்திருந்தார். பார்ப்பதற்கு பக்கிரி போன்று இருந்தார். அவர் புகைபிடிப்பதற்காக புகைக் குழாயை தயார் செய்து கொண்டி ருந்தார்.

சாந்த்பாடீல் அவ்விடத்திற்கு வந்து அமர்ந்ததும், அம்மனிதர் அவரைப்பார்த்து, வாருங்கள், வாருங்கள், இங்கு சற்றுநேரம் ஓய்வெடுத்துச் செல்லுங்கள் என்று கூறினார். பிறகு, அதென்ன குதிரை சேணத்தை மட்டும் தோளில் சுமந்து வருகிறீர். குதிரை எங்கே என்று கேட்டார்.

சாந்த்பாடீல் தன்னுடைய குதிரை தொலைந்து போனக் கதையைக் கூறி, அதனுடைய சேணம்தான் இது என்று சோக மாகக் கூறினார். பக்கிரி உடனே, உங்கள் குதிரை எங்கேயும் தொலை ந்து போகவில்லை. குதிரையை விட்டு நீர் தான் தொலைந்து போய்விட்டீர். அதோ அங்கே தெரிகின்றதே ஒரு சிறிய மாஞ் சோலை. அங்குதான் உமது குதிரை மேய்ந்து கொண்டிருக்கின்றது. அங்குபோய் தேடிப்பாரும் என்று கூறினார்.

தொலைந்துபோன குதிரை எப்படியாவது கிடைத்து விடாதா என்ற ஏக்கத்தில் இருந்த சாந்த்பாடீல் உடனடியாக அருகில் இருந்த மாஞசோலைக்குச் சென்று பார்த்தார். என்ன அதிசயம். தனது குதிரை அங்கேதான் மேய்ந்து கொண்டிருந்தது. சாந்த்பாடீலைக் கண்டதும் கணைத்துக்கொண்டு அவரருகே ஓடி வந்தது.

அப்போதுதான் பக்கிரி சாதாரண மனிதர் அல்ல, பெரிய ஞானியாகத்தான் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டு, தன் குதிரையுடன் அந்த மனிதரிடம் திரும்பி வந்தார். அவரைக்கண்டதும் பக்கிரி, நான் கூறினேனல்லவா, குதிரை கிடைத்துவிட்டதா, வா வந்து சிறிது நேரம் அமர்ந்து ஓய்வெடுத்துச் செல் என்று அழைத்தார்.

பிறகு என்னிடம் புகைபிடிப்பதற் குண்டான ஹூக்கா தயாராக இருக்கின்றது. உன்னிடம் நெருப்பு இருக்கின்றதா என்று கேட்டார். பாடீல் தன்னிடம் இல்லை என்று கூற பக்கிரி, பரவாயில்லை என்றவாறே, தன் ஜோல்னா பையினில் இருந்து கத்தி ஒன்றை எடுத்து நிலத்தில் குத்தினார்.

என்ன ஆச்சர்யம் நிலத்தில் இருந்து எரியும் ஒரு கரித்துண்டு வெளியே வந்து விழுந்தது. அதை எடுத்து அவர் புகைக் குழாயில் இட்டார். பிறகு தனது சட்காவை தரையில் ஓங்கி அடித்தார். அங்கிருந்து தண்ணீர் பீறிட்டு அடித்தது. பக்கிரி தன்னிடம் இருந்த துணியை தண்ணீரில் நனைத்து புகைகுழாயில் சுற்றி ஹூக்காவை இழுத்துவிட்டு அதை சாந்த்பாடீலுக்கும் கொடுத்தார்.

தன் முன் நடந்த அதிசயங்களை கண்ணுற்ற சாந்த்பாடீல், வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டார். அய்யா தாங்களை சாதாரண பக்கிரி என்று தவறாக எண்ணிவிட்டேன். இச்சிறியேனை மன்னித்து பெரிய மனது செய்து என் வீட்டிற்கு வந்து நாங்கள் தரும் மரியாதையை ஏற்றுக்கொள்ள வேண்டும் அய்யா. என்று கேட்டுக்கொண்டார்.

பக்கிரியும் அவரின் வேண்டு கோளுக்கு செவிசாய்த்தார். சாந்த்பாடீலுடன் சென்று தூப் கிராமத்தில் அவரது விருந்தினராக சில நாட்கள் தங்கியிருந்தார். பக்கிரி, சாந்த்பாடீலில் வீட்டிற்கு வந்த நேரம் அவரது மனைவியின் சகோதரனுக்கு திருமணம் நிச்சயமானது. மணப்பெண் சிர்டியில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாள்.

எனவே பாட்டீல் கல்யாண கோஷ்டியுடன் சிர்டிக்கு செல்வதற் குண்டான ஆயத்தங்களை செய்ய ஆரம்பித்தார். கூடவே, பக்கிரியும் தங்களுடன் சிர்டிக்கு வந்து திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

பக்கிரியும் சம்மதித்து கல்யாண கோஷ்டியுடன் சிர்டிக்கு வந்தார். கல்யாணகோஷ்டி சிர்டியை அடைந் ததும், கண்டோபா கோவிலுக்கு அருகில் உள்ள ஆலமரத்தடியில் வந்து தங்கினர். கண்டோபா கோவி லின் பரந்த வெளியில் வண்டிகள் அவிழ்த்து விடப்பட்டன. வண்டி யில் இருந்து முதல் ஆளாக பக்கிரி இறங்கினார்.

அவரைப் பார்த்த கந்தோபா கோவிலின் பூஜாரி மகல்சாபதி ஓடிவந்து "யா சாயி" என்று அழைத் தார். அதிலிருந்து அனைவரும் அவரை சாயி என்று அழைத்

தார்கள். அதில் இருந்து பக்கிரி, சாயிபாபா என்னும் பெயரால் அறியப்பட்டார்.

சாந்தீபாட்டீலின் கல்யாண கோஷ்டி எந்தவித சிரமமும் இன்றி திருமணம் முடித்து தூப் கிராமத்திற்கு திரும்பியது. ஆனால் சாயி சிர்டியிலேயே தங்கிவிட்டார்.

ஒரு இஸ்லாமிய துறவி, இந்து கோவிலான கந்தோபா கோவிலில் தங்குவதற்கு சிலர் எதிர்ப்பு தெரி வித்தனால், சாயி ஊருக்குள் உடைந்து சிதிலமடைந்திருந்த ஒரு மசூதியில் தங்க ஆரம்பித்தார்.

பாபா சிர்டிக்கு வருவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே தேவிதாஸ் என்ற ஞானி சிர்டியில் தங்கியிருந்தார். சாயிபாபா அவருடனான நட்பை பெரிதும் விரும்பினார். அவருடன் மாருதி கோவிலிலும், சாவடியிலும் தங்கியி ருந்தார். பெரும்பாலான நேரங் களில் தனியாகவே இருந்தார்.

பிறகு சிர்டிக்கு ஜானகிதாஸ் என்ற மற்றொரு ஞானியும் வந்தார். பாபா இந்த இருவருடனும் பேசிக் கொண்டிருப்பதிலேயே அதிக நேரம் செலவிட்டார். பாபாவும் அவர்கள் இடத்திற்குச் செல்வார். ஜானகி தாஸூம் பாபாவின் இடத்திற்கு வருவார்.

ஒருநாள் "புண்தாம்பேயி" என்ற இடத்தில் இருந்து இல்லற ஞானியாகிய காங்காதீர் என்பவர் சிர்டிக்கு வந்து தேவிதாஸ், ஜானகிதாஸூடன் தங்கியிருந்தார். அப்போது, சா யிபாபா தன் கைகளாலேயே மண்பானையில் தண்ணீர் எடுத்து வந்து பூச்செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சியதைக் கண்டார்.

அப்போது சாயிபாபாவைப் பற்றி மக்களிடம் கங்காதீர் இவ்வாறு கூறினார். இந்த "சீர்டி கிராமம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. அது விலை மதிக்க முடியாத வைரத் தைப் பெற்றிருக்கிறது. இம்மனிதர் இன்று தண்ணீர் சுமந்து கொண்டி ருப்பதைக் கண்டு இவர் சாதாரண மான மனிதர் என்று எடை போட்டுவிடாதீர்கள்.

அவர் சாதாரணமான மனிதர் இல்லை. இந்த சிர்டி அதிர்ஷ்டமும், புண்ணியமும் பெற்றிருக்கிறது. ஆதலால்தான் அது ஓர் வைரத்தைப் பெற்றிருக்கின்றது என்று கூறினார். அதுபோலவே யேவலா என்ற மடத்தைச்சேர்ந்த, அக்கல்கோட் மகராஜின் சீடரும், புகழ் பெற்ற ஞானியுமான ஆனந்த்நாத் என்பவர் சிர்டி வந்திருந்தபோது, பாபாவைப் பார்த்து பின்வருமாறு கூறினார்.

"இது உண்மையில் விலை மதிக்கமுடியாத இரத்தினமாகும்". அவர் பட்டை தீட்டப்படாத ஒரு சாதாரண மனிதரைப் போன்று தோன்றினாலும், அவர் பட்டை தீட்டப்பட்ட சுத்தமான மிவும் உயர் வான இரத்தினகல் ஆகும். கூடிய விரைவில் சிர்டி மக்கள் அதை உணர் வீர்கள் என்று கூறிச் சென்றார்.

சாயிபாபா தனது இளம் வயதில் தமது தலையில் நிறைய முடி வளர்த்தார். தலைமுடியை அவர்

ஒழுங்கு படுத்துவதே கிடையாது. விளையாட்டு வீரரைப்போன்று உடையணிந்தார்.

சிர்டியில் மொஹித்தின் தாம்போலி என்ற ஓர் மல்யுத்தவீரன் ஒருவன் இருந்தான். பாபாவிற்கும் அவனுக்கும் சில விசயங்களில் உடன்பாடு ஏற்படவில்லை. இருவரும் மல்யுத்தம் செய்யத் தொடங்கினர். இதில் பாபா தோற்கடிக்கப்பட்டார்.

அதிலிருந்து பாபா தம்முடைய உடையையும், வாழ்க்கை முறையையும் மாற்றி அமைத்துக் கொண்டார். கஃப்னி உடை அணிந்தார். கோவணம் அணிந்து தன் தலையை ஓர் துண்டு துணியால் இறுக கட்டிக்கொண்டார். அமருவதற்கு ஒரு சாக்கையும், படுக்கைக்கு மற்றொரு சாக்கையுமே உபயோகித்தார்.

கிழிந்து, மடிந்துபோன பழைய கந்தை உடைகளை அணிவதிலேயே திருப்தியடைந்தார். அவர் எப்போதும், "ஏழ்மை அதிகாரத்தை விட நன்று. ஏனெனில் கடவுள் ஏழைகளின் நிரந்தர நண்பராவார்". என்று கூறுவார்.

சாயிபாபா மக்களுடன் கலந்து பேசுவதில்லை. அவரை யாராவது கேள்வி கேட்டால் மட்டுமே அதற்கு பதில் கூறுவார். பகல் பொழுது முழுவதும் வேப்ப மரத்தின் அடியிலேயே

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.



குழந்தை பிறந்தது. இச்செய்தி ஊர் முழுக்கப் பரவி பாபாவைப் பார்க்க மக்கள் கூட்டம் கூட்டமாக திரண்டு சிர்டிக்கு வர ஆரம்பித்தனர்.

சாயிபாபாவின் புகழ் அகமது நகர் வரை பரவி, பாபாவைப் பற்றி கேள்விப்பட்ட, நானாசாஹேப் சாந்தோர்கர், மற்றும் கேசவ் சிதம்பரும் சிர்டிக்கு வரத்தொடங்கினர். பாபா பகல் பொழுதில் தம் அடியவர்களால் சூழப்பட்டிருந்தார். இரவில் சேதமடைந்திருந்த மசூதியில் படுத்துறங்கினார்.

அமர்ந்திருப்பார். சில சமயம் கிராம எல்லையிலுள்ள வாய்கால் அருகே உள்ள ஆலமரத்தின் அடியில் அமர்ந்திருப்பார் மாலை நேரங்களில் குறிக்கோள் இன்றி நடந்து கொண்டே இருப்பார்.

ஒரு சில நேரங்களில் சிர்டி அருகில் இருக்கும் நிம்காங்வ் என்ற ஊருக்குப் நடந்தே போவார் பாபா. அங்கு வசித்துவந்த திரு. பாபா ஸாகேப் என்பவரின் மீது பாபா மிகுந்த அன்பு வைத்திருந்தார். அவரின் தம்பியான நானா ஸாகேப் பிற்கு இரண்டாவது திருமணம் முடிந்தும் குழந்தை இல்லை

ஆகவே தனது தம்பியை, பாபாவின் தரிசனத்திற்கு அனுப்பி வைத்தார் பாபா ஸாகேப். சில காலத்திற்குப் பின்பு சாயிபாபாவின் அருளால் நானா ஸாகேப்பிற்கு ஒரு

பாபாவிடம் அந்நாளில் ஹூக்கா, புகையிலை, ஒரு தகர டப்பா, நீண்ட கஃப்னி, தலையை சுற்றி கட்ட ஒரு துணி, ஒரு குச்சி முதலியவையே இருந்தன. இவைகளை பாபா எப்போதும் தன்னுடனே வைத்திருந் தார். தலையில் முறுக்கப்பட்ட துணி இடது காதிலிருந்து தொங்கியது. அது பல வாரங்களாக துவைக்கப் படாமலே இருந்தது.

அவர் எந்த விதமான காலணியும் அணியவில்லை. குளிரை விரட்ட எப்போதும் நெருப்பை மூட்டி அதன் முன்னால் அமர்ந்திருந்தார். எப்போதும் " அல்லா மாலிக்" என்று கூறிக்கொண் டேயிருந்தார். எப்போதாவது காலில் சலங்கை கட்டிக்கொண்டு அழகாக நடனம் செய்துகொண்டே பாடுவார்.

தரிசனம் தொடரும்



சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

இம்மாத சாயிலீலாவில் அயனாவரத்தில் வசிக்கும் சகோதரி இந்துமதி அவர்கள் தனது அனுபவங்களை எழுதுகிறார்.



– ஜெயந்தி ஸ்ரீராம்

சீரடி ஸ்ரீ சாய்பகவானின் பொற்பாத கமலங்களில் என் இதயத்தோட்டத்தில் பூத்த நன்றி கலந்த மலர்களை காணிக்கையாக்கி சரணடைகிறேன்.

சாயி மகராஜ் குருவை தேடி மாத இதழின் ஆசிரியரும், ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தின் நிறுவனருமான, மதிப் பிற்கும், மரியாதைக்கும் உரிய எனது குருஜி திரு. ஸ்ரீராம் சாய் அவர்களுக்கு கோடானுகோடி அன்பு வணக்கங்களை என் சிரம் தாழ்த்தி தெரிவித்துக் கொள்கிறேன்.

பகவான் சீரடி சாயிநாதன் மூலமாகவும், குருஜி திரு. ஸ்ரீராம் சாய் அவர்களின் மூலமாகவும் என் வாழ்வில் நிகழ்ந்த சில நிகழ்வு களை உங்களுடன் பகிர்ந்து

கொள்ள விரும்புகிறேன். நீண்ட நாட்களாகவே எனது அனுபவங்களை எழுத வேண்டும் என்ற ஆவல் இருந்தும் எழுதுவதற்கு சிறிது தயக்கமாகவே இருந்தது. ஆகவே எனது எண்ணம் நிறை வேறாமல் தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது.

சென்ற வருடம் ஜூலை மாத இதழில் குருஜி அவர்கள் எழுதிய அமுத மொழியில், "மாபெரும் படைப்புகளை உருவாக்க நல்ல உணர்வுகளும், அபரிதமான, மகிழ்ச்சியான மனநிலை மட்டும் இருந்தால் போதும். உனக்கு நிச்சயம் வெற்றி கிட்டும். நான் என்றும் உனக்கு துணையாக இருப்பேன். உன் கடமையைச் செய். சிறப்பான பலனை நான் கொடுக்கிறேன்" என்ற வரிகளை படித்த வுடன் எனக்குள் எழுத வேண்டும் என்ற ஊக்கத்தைப் பெற்றேன்.

ஒரு சில வருடங்களுக்கு முன்பு ஸ்ரீ சத்யசாய் பாபாவின் அவதார தின அபிஷேகத்திற்காக சாய் இராஜயோகா என்ற கம்பெனியின் சீயக்காய் தூள் கொண்டு வந்திருந்தார்கள். அந்த கவரில், நமது சாய் மகராஜ் குருவைதேடி முகவரி இருந்தது. அந்த முகவரி எனது வீடு இருக்கும் தெருவிற்கு அடுத்த தெருவில்தான் இருக்கிறது.

அதைப்பார்த்தவுடன், நமது வீட்டின் அருகிலேயே இருக்கின்றது. நாம் அவசியம் செல்ல வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. ஆனால் எவ்வளவு முயற்சித்தும் என்னால் பாபா வீட்டிற்கு செல்லும் வாய்ப்பு கிட்டவில்லை. இப்படியே ஒரு வருடத்திற்கு மேலானது

ஒருமுறை அருகில் உள்ள பாபா ஆலயத்திற்கு சென்றபோது அங்கே சாய் மகராஜ் குருவைதேடி இதழை கொடுத்தார்கள். புத்தகத்தைப் படித்துவிட்டு, இவ்வளவு அருகில் இருந்தும் நம்மால் செல்ல முடிய வில்லையே என்று வருந்தினேன்.

இருப்பினும் கடந்த பல வருடங்களாக, காரணமே இல்லாமல் எப்பொழுதும் என் மனம் படபடப்பாகவே இருக்கும். பலவிதங்களில் எவ்வளவோ முயற்சித்தும் என்னை விட்டு அந்த படபடப்பு நீங்க வில்லை. அருகில் இருக்கும் பாபா வீட்டிற்கு செல்ல முடியவில்லையே என்ற கவலைகூட எனக்கு படபடப்பாக மாறிப்போனது.

வாழ்க்கையில் சில முக்கிய மான திருப்பங்கள் ஏற்படவேண்டு மானால், சில சம்பவங்களையும், சில இடங்களையும் நாம் அவ்வளவு சீக்கிரத்தில் அடைந்து விடமுடியாது. அதற்குண்டான நேரம் வரும்வரை நாம் பொறுத் திருக்கவேண்டும். நேரம் காலம் வரும்போது இறைவனே அதற் குண்டான வழியைக் காட்டுவான் என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

ஒருவழியாக, 2022 ஆம்வருடம் ஜனவரி 20 ந்தேதி வியாழக்கிழமை அன்று மாலை 7 மணிக்கு பாபா வீட்டிற்குச் சென்றேன். கதவுகள் திறந்தே இருந்தன. நான் உள்ளே சென்றேன். குருஜி மட்டும் படித்துக் கொண்டு இருந்தார்கள். நான் சென்றுஅவரிடம் வாழ்க வளமுடன்



சாய்ராம் என்று கூறினேன். பதிலுக்கு அவரும், வாழ்க வளமுடன், சாய்ராம் என்று கூறிவிட்டு,

"வாங்கப்பா" என்றார்.

"வாங்கப்பா" என்றது எனக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது. ஏனென்றால், நானும் அனைவரிடமும், வாங்கப்பா, போங்கப்பா என்றுதான் பேசுவேன்.

குருஜியிடம் சிறிதுநேரம்தான் பேசியிருப்பேன். அதற்குள் என் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. குருஜி என்ன நினைத்தாரோ தெரியவில்லை. நாம் இப்போது கொஞ்ச நேரம் தியானம் செய்யலாம் என்றார். நானும் தியானம் செய்வதற்கு கண்ணைமூடி தயார் ஆனேன்.

சிறிது நேரத்தில் குருஜி தனது கரங்களை என் தலையில் வைத்தார். கரங்களை என் தலையில் வைத்த அந்த விநாடியில் இருந்து என் மனதின் படபடப்பு நின்று போனது. மனம் அமைதியாய் தியானித்தது. அந்த விநாடியில் இருந்து இன்றுவரை மீண்டும் அந்த படபடப்பு எனக்கு வரவேயில்லை. குருஜிக்கு எனது கோடானுகோடி நமஸ்காரங்களை இதன் மூலம்

தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒருநாள் எங்களது வீட்டில் சத்ய சாய்பாபா சிவன் அலங்காரத்தில் இருக்கும் போட்டோவை வைத்து சிவபுராணம் படித்தேன். பின்பு பாபா வீட்டிற்குச் சென்று குருஜியை சந்தித்தேன். குருஜி அவர்கள், எனக்கு ஒரு பேப்பரில் விபூதி கொடுத்தார். நான் அந்த பேப்பரை பிரித்து பார்த்தால். அதில் நான் வணங்கிய சிவன் அலங்காரத்தில் இருந்த சத்ய சாய்பாபா போட்டோவும், மஹா பெரியவா போட்டோவும் இருந்தது. அது எனக்கு மிகவும் ஆச்சர்யமாகவும், ஆசீர்வாதமுமாக இருந்தது.

ஒரு வியாழன் அன்று பாபா வீட்டிற்குச் சென்று தியானம் செய்துவிட்டு வீட்டிற்கு வருகிறேன். அது என் கணவருக்கு தெரியாது. என் கணவரோ அருகில் இருக்கும் பனந்தோப்பு பாபா ஆலயம் சென்று வந்தவர் ஆலயத்தில் கொடுத்ததாக அந்த மாத சாயி மகராஜ் குருவை தேடி இதழை என்னிடம் கொடுத்தார்.

நான் என் கணவரிடம், இதழின் ஆசிரியர், திரு ஸ்ரீராம் சாய் வீட்டிற்கே நான் சென்று வருகிறேன் என்று கூறி நானும் புத்தகத்தை காட்ட, நாங்கள் இருவருமே பாபாவின் கருணையை நினைத்து ஆனந்தப்பட்டோம்.


அடுத்த வியாழக்கிழமை எனக்கு கடினமான முதுகுவலி. முதுகு வலியோடு பாபா வீட்டிற்குச் சென்றேன். அங்கே தியானம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் உள்ளே சென்ற அந்த விநாடி, குருஜி திரு.ஸ்ரீராம் அவர்கள், "முதுகு தண்டுவடம் பலம் பெறும்" என்றார். நான் அன்று ஆசீர்வதிக்கப்பட்டவளாக உணர்ந்தேன்.

அடுத்த மாதத்தில் ஒரு நாள் என் கணவரும் பாபா வீட்டிற்கு வந்தார். குருஜி அவர்கள், அவருக்கு தீட்சை அளித்து, மூன்று மாதத்தில் உங்களது உடல்நலப் பிரச்சனைகள் தீர்ந்து நலமடைவீர்கள் என்றார். அதன்படி என்கணவருக்கு நாங்கள் பெரிதாக நினைத்து பயந்து கொண்டிருந்த உடல்நலக் கோளாறுகள் படிபடியாக குணமானது.

குருஜி அவர்கள் தனது சத்சங்கத்தில் மனிதர்களுக்கு தியானப்பயிற்சி மிகமுக்கியமானது என்பதை அழுத்திக் கூறுவார். ஆனால் லௌகீகமான உலகத்தில் நம்மால் நமது குருஜி கூறியதை பயிற்சி செய்ய முடியவில்லையே என்று மன வருத்தப்பட்டுக்கொண்டே அன்றைய சத்சங்கத்தில் கலந்து கொண்டேன்.

என்னைப்பார்த்ததும் குருஜி அவர்கள், எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றாக இருந்தால் தனியாக தியானம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறினார். அது எனக்கே கூறியதைப் போலிருந்தது.

1.9.22 அன்று எங்களுக்கு 40 வது திருமண ஆண்டு. நானும் என் கணவரும் ஐ.சி.எப் கமல விநாயகர் கோவிலுக்குச் சென்று விட்டு, பாபாவீட்டிற்குச் சென்று குருஜியிடம் ஆசீர்வாதம் வாங்கச்



சென்றோம். அப்போது ஆரத்தி எடுக்கும் நேரம். எங்களைப் பார்த்ததும். குருஜி ஸ்ரீராம் சாய் அவர்கள் என்னை பாபாவிற்கு ஆரத்தி எடுக்கச்சொன்னார்.

நான் முதல்முதலாக பாபாவிற்கு ஆரத்தி எடுத்தேன். திருமணநாள் அன்று பாபாவிற்கு ஆரத்தி எடுக்கும் பாக்கியம் கிடைத்ததை எண்ணி மனம் மகிழ்ந்தது. பிறகு இன்று எங்களது 40 வது திருமணநாள் என்று குருஜியிடம் கூறி ஆசீர்வாதம் பெற்றோம்.

4.9.22 ஞாயிறு அன்று சாயி மகராஜ் குருவை தேடி இதழின் 50 வது வெளியீட்டு விழா. நான் வீட்டில் இருந்து புறப்படும்போது மஹா பெரியவா போற்றி படித்து விட்டு சென்றேன். அம்மாத இதழில் மஹா பெரியவா பற்றி சிறப்புக் கட்டுரை எழுதியிருந்தார் குருஜி அவர்கள்.

13.10.22 அன்று பாபா வீட்டிற்குச் செல்லும் முன் குருஜி ஸ்ரீராம் சாய் நமக்கு சகோதரராய் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தவாறே சென்றேன். குருஜி சத்சங்கம் செய்து கொண்டிருந்தார்.

நான் என் சொந்த சகோதர சகோதரிகளின் மேல் உள்ள பற்றை விட்டுவிட்டேன். அவர்களிடம் இருந்து மனதளவில் ஒதுங்கி இருக்கின்றேன். சாயிநாதர் எனக்கு ஆயிரம் சகோதர சகோதரிகளை கொடுத்துள்ளார். என்று கூறிய போது நான் உள்ளே நுழைந்தேன். குருஜி என்னைப் பார்த்தும் இதோ இவர் எனது சகோதரிகளில் ஒருவர் என்றார். எனக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. நான் சாயிநாதருக்கு நன்றி கூறினேன்.

குருஜி எப்போதும் தனது சத்சங்கத்தில், கடவுளைத் தேடி ஊர் ஊராக சுற்றிக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு தியானத்தின் மூலம் உங்களுக்குள் கடந்து செல்லுங்கள். கடவுளைக் காணலாம் என்று கூறுவார்.

ஆகவே புனிதப் பயணங்களுக்கு செல்லும்போது, அவரிடம் சொல்வதற்கு எனக்கு சிறிது தயக்கம் இருந்தது.

ஒரு நாள் தூக் கத்தில் நான் ஒரு கனவு கண்டேன். கனவில் நானும் என் கணவரும் குருஜியிடம் சென்று நாங்கள் காசிக்கு சென்று வருகின்றோம் என்று

கூற, அவரும் எங்களை வாழ்த்தி வழியனுப்புகிறார்.

கனவில் இருந்து விழித்த நான் குருஜியிடம் சென்று காசிக்கு புனித யாத்திரை செல்வதாக கூறி ஆசி வேண்டி னேன்.

அவரும் உடனடியாக, வாழ்க வளமுடன் சந்தோசமாக சென்று வாருங்கள் என்று வழியனுப்பி வைத்தார். பயணம் முடிந்து வந்த நான் குருவிற்கு காணிக்கை அளிக்க நினைத்து ஒரு கவரில், ஓம் சாயி நமோ நம, ஸ்ரீ சாயி நமோ நம, ஜெய,ஜெய சாயி நமோ நம, சற்குரு சாயி நமோ நமஹ என்று எழுதிக்கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன்.

மறுநாள், கவரில் மந்திரம் எழுத மறந்துவிட்டு காணிக்கை உள்ள கவரை குருஜியிடம் சமர்பித்தேன். குருஜி அந்த மாத புத்தகத்தை எனக்கு அளித்தார். நான் புத்தகத்தை எதார்த்தமாக புரட்ட புத்தகத்தின் 7ஆம் பக்கத்தில் அதே மந்திரம் அச்சாகியிருந்தது. அற்புதத் திலும் அற்புதமாக இருந்தது.

ஒரு முறை குருஜி அவர்கள், உங்களுக்கு பூர்வஜென்ம புண்ணியம் நிறைய இருக்கின்றது என்று கூறினார். எனக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. ஏன் என்றால் பல சோதிடர்கள் என் சாதகத்தை ஆராய்ந்து பார்த்து சொன்னதை குருஜி அவர்கள் என்னைப் பார்த்தவுடனே சொன்னதை நினைக்கும்பொழுது குருஜி அவர்களை நான் பாபாவாகவே பார்க்கின்றேன்.

ஒரு வியாழக்கிழமை குருஜி திரு. ஸ்ரீராம் அவர்கள் நிகழ்த்திய தியானத்தில் கலந்து கொண்டேன். தியானத்தில் குருஜி என் தலை மீது கையை வைத்து தீட்சை வழங்கியபிறகு வெகுநேரம் அவரின் கை என் தலையிலேயே இருப்பதை உணர்ந்தேன்.

சிறிது நேரங்கழித்து குருஜியின் குரல் தூரத்தில் கேட்டது. அப் போதுதான் அவர் நகர்ந்த பின்பு, என் தலைமீது இருந்தது பாபாவின் கரங்கள் என்பதை உணர்ந்தேன். பகவான் சாயி நாதருக்கும், குருஜி ஸ்ரீராம் சாயிக்கும் எனது கோடானுகோடி நமஸ்காரங்கள்.

குருஜி திரு. ஸ்ரீராம் சாயியியை நான் எப்பொழுதெல்லாம் சந்திக்கிறேனோ அப்பொழுதெல் லாம் ஏதாவது அதிசயமும், அற்புதமும் நடந்து கொண்டே இருக்கும். நான் என்ன நினைத்துக் கொண்டு செல்கிறேனோ, அதை நான் கூறுவதற்குமுன்பு, அது சம்பந்தமாகவே என்னிடம் பேசுவார்.சமீபத்தில்கூட குருஜிவேறு வீடு பார்த்துக்கொண்டிருந்தார். நான் பாபாவிடம் எங்கள் குருஜி எங்களை விட்டு வெகுதூரம் சென்றுவிடக்கூடாது என்று பிரார்த்தித்துக் கொண்டேன்.

குருஜி தற்போது குடியிருக்கும் தெருவிற்கு பக்கத்து தெருவிலேயே வீடுகிடைத்தது என்றுகூறினார்.நான் பாபாவின் கருணையை எண்ணி மனதிற்குளாக நன்றி கூறினேன்.

ஓம் சாய்ராம்.

– தொடரும்

SOUNDS GOOD

LIGHT MUSIC ORCHESTRA

BOOK FOR EVENTS



Wedding | Birthday | Corporate Get together Events



- Light Music
- Karaoke
- Instrumental Music
- DJ Music



Sounds Good

www.soundzgood.in

95 66 16 76 80

saai_archana_vr

SOUNDSGOOD Musically the best

SoundsGood Music Group

சாய் தியானாலயா ஆத்மஞான பீடம்

- அகஸ்டின்

குரு தாழ் வணங்கி!

அன்புள்ளம் கொண்ட சாய் சொந்தங்கள் அனைவருக்கும் அன்பு கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த இரண்டு மாதங்களாக ஸ்ரீ சாய்ராம் ஆத்மஞான பீடம் பொது வெளியில் செயல்படுவதற்காக ஓர் இடமும் அதற்கான காரணத்தையும் தொடர்ந்து எழுதி வருகிறேன்.

சாய் சொந்தங்களும் அதை புரிந்துக்கொண்டு தங்களுடைய ஆதரவை தெரிவித்து தங்களால் இயன்ற பொருளுதவியை அளித்தும் வருகிறீர்கள். அதற்காக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது சாய்தியானாலயாவில் மாத இதழாக சாய் மகராஜ் குருவை தேடி புத்தகமும், வியாழன் தோறும் அன்னதான வழங்குதலும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையன்று தியானம் மற்றும் சத்தங்க வகுப்பும் குரு ஸ்ரீராம் அவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

இதை தவிர்த்து பிரதி மாதம் கடைசி சனிக்கிழமையன்று படப்பையிலும், பிரதி மாதம் இரண்டு மற்றும் மூன்றாம் வாரம் சனிக்கிழமை அன்று குரோம்பேட்டையிலும் தியானம் மற்றும் சத்சங்க வகுப்பும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மேலும் ஸ்ரீசாய் மகராஜ் குருவை தேடி தொடர் முடிவடைந்து தனி புத்தகமாக வெளிவருவதற்கான ஆயத்த வேலையும் நடைப்பெற்று வருகிறது என்பதையும் இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குரு ஸ்ரீராம் அவர்களால், மேற்கண்ட ஆன்மீக நிகழ்ச்சிகள் தொடர்ந்து கடந்த பத்து வருடங்களாக அவரது அயனாவரம் இல்லத்தில் நடைபெற்று வருவதை சாய் சொந்தங்கள் அனைவரும் அறிந்ததே! அவ்வில்லம் தியான வகுப்பில் சொற்ப நபர்கள் அமரக் கூடிய வகையில் இருக்கின்றது.

எனவே, பொதுமக்கள் எந்நேரமும், எப்பொழுதும் பயன் பெறக் கூடிய வகையில், அண்டினோற்கு அன்ன வளமும், வேண்டினோற்க்கு ஞான வளமும் என்ற கொள்கையோடு ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்மஞான பீடம் என்ற பெயரில் ஓர் பொதுவான இடம் அமைக்கப் படவேண்டும் என்று ஆலோசித்து அதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இப்பணியில் சாய் மகாராஜ் குருவை தேடி புத்தகத்தை படிக்கும் ஒவ்வொரு வாசகர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன். மாதந்தோறும் 5000 பிரதிகள் அச்சிட்டு வெளியிடப்படுகிறது கடல் கடந்தும் நம் புத்தகம் பயனிக்கிறது பெரும் பான்மையான வாசகர்கள் பெரும் பான்மையான பங்களிப்பை அளிக்க வேண்டும் அப்படி



அளிக்கும் பட்சத்தில் பீடம் மிக விரைவாக அமைவதற்கு வாய்ப்பு உள்ளது.

ஆனால் அனைத்து வாசகர்களின் பங்களிப்பையும் எதிர்ப்பார்ப்பது பேராசைதான். ஏனென்றால் வாசகர்களின் மனநிலையில் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு கருத்துக்கள் எழலாம். சிலருக்கு எதிர்மறை கருத்துக்கள் கூட எழலாம்.

சிலருக்கு நம் பங்களிப்பை அளிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் எழலாம். சிலருக்கு தன்னால் இயன்றதை செய்துவிட்டோம் என்றும் நினைத்துக்கொள்ளலாம். சிலருக்கு இப்பணியானது இறைபணி இதில் தம் பங்களிப்பு முழு அளவில் இருக்கவேண்டும் என்று நினைத்து அதற்காக அயராது செயலாற்ற வேண்டும் எனவும் நினைக்கலாம்.

இப்படி ஒவ்வொருவருடைய மனநிலையில் ஆத்மஞான பீடத்தை பற்றிய செயல்கள் வெவ்வேறு வகையில் சிந்தனை துளிகளாக எழலாம். ஆனால் இப்பீடமானது இத்தலைமுறைக்கும் அடுத்தடுத்து வரும் தலைமுறைக்கும் மெய்ஞானத்தை அள்ளிக் கொடுக்கும் அட்சய பாத்திரமாக இயங்கும் என்பதில் எவ்வித அய்யமும் வேண்டாம்.

இத்தருணத்தில் ஓர் பழமொழி தோன்றியது "தென்னை மரத்தை திரும்பி பார், பனை மரத்தை மறைந்திருந்து பார்" என்பார்கள் தென்னை மரத்தை பயிர் செய்தவர் அத்தலைமுறையிலேயே பலனை அடைந்துவிடலாம். ஆனால் பனை மரத்தை பயிர் செய்பவரின் அடுத்த தலைமுறைதான் பயன்பெறும்.

தொலைநோக்கு சிந்தனையாளராகவும், பிரதிபலன் எதிர்பார்க்காதவராகவும் அடுத்த தலைமுறைக்கு என்று சிந்திக்கும் மனம் கொண்டவராக இருந்தால் மட்டுமே அவ்விதையை ஊன்றி செல்வர். அதற்கேற்றார் போல் அம்மரமானது பூ கனி பழம் இலை தண்டு என அனைத்தும் பயன் தரும் வகையில் அமைந்திருக்கும்.

ஆகவே சாய் சொந்தங்களே நமது சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடமானது நீடித்து நிற்கும் பனைமரம் போன்றது. அது செழித்தோங்கி வளர்த்திட தங்கள் ஆதரவை அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். சென்னை மாவட்டம் மட்டுமின்றி, பிற மாவட்டத்திலிருந்தும் தங்களுடைய ஆதரவையும் பங்களிப்பையும் தெரிவிக்கும் போது மற்றற்ற மகிழ்ச்சி அடைகிறேன் .

நன்றி வணக்கம்,

இங்ஙனம்
சொ. அகஸ்டின்
நம்பிக்கை பொறுமை..

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.



அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

உடல் எடையை குறைக்கும் "கம்பு"

உலகினில் அதிகமாகப் பயிரிடப்படும் சிறுதானியங்களில் கம்பு முதலிடத்தை பிடிக்கிறது. பொதுவாக ஆப்ரிக்கக் கண்டத்தில் இது தோன்றியதாகக் கருதப்படுகிறது. ஏறத்தாழ 40 க்கும் மேற்பட்ட நாடுகளில் விளைந்து உணவுப் பொருளாகப் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க நாடு களில் கம்பு மனிதர்களுக்கு உண வாகவும், கால்நடைத் தீவனமா கவும், எரிபொருளாகவும் பயன் படுத்தப்பட்டு வருகிறது. உலகின் மொத்த சிறுதானிய உற்பத்தியில் 55% இடத்தை கம்பு பிடித்திருக்கிறது.



தானியங்களிலேயே அதிக அளவாக 11.8 சதவிதம் புரோட் டீன் கம்பில்தான் உள்ளது. ஆரோக்கியமான தோலிற்கும், கண்பார்வைக்கு முக்கிய சத்தான வைட்டமின் ஏவை உருவாக்கு வதற்கு முக்கிய காரணியான பீட்டா கரோட்டீன் கம்பு பயிரில் அதிக அளவில் உள்ளது.

100 கிராம் கம்பில், 42 மில்லி கிராம் கால்சியம் சத்து உள்ளது. 11 முதல் 12 மில்லி கிராம் இரும்புச் சத்து உள்ளது.

பி 11 வைட்டமின் சத்து 0.38 மில்லி கிராம் உள்ளது. ரைபோபிளேவின் 0.21 மில்லி கிராம் உள்ளது. நயாசின் சத்து 2.8 மில்லி கிராம் உள்ளது.

வேறு எந்தத் தானியத்திலும் இல்லாத அளவு 5 சதவிதம் எண் ணெய் உள்ளது. இந்த எண்ணெயில் 70 சதவிதம் கொழுப்பு அமிலம் உள்ளது. இது உடலுக்கு மிகவும் உகந்த கொழுப்பு ஆகும்.

இந்தியாவில் நடைபெற்ற அகழ் வாராய்ச்சிகளில் கம்பு 2000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா விற்கு கொண்டு வரப் பட்டுள்ளது தெரியவருகிறது. கம்புப் பயிர் வறட்சியையும் தாங்கிக்கொண்டு வளரக்கூடியது. அதிக தட்ப வெப்ப சூழலிலும், குறை வான ஊட்டமுள்ள நிலங்களி லும் கூட வளரும் தன்மை உடையது.

நன்கு உலர வைத்த கம்பு தானியம் சுமார் 3 முதல் 6 மாதங்கள் வரை கெடாமல் இருக்கும். பின்னர் மீண்டும் ஒருமுறை வெயிலில் காயவைத்து எடுத்து வைத்தால் மேலும் 6 மாதங்கள் கெடாமல் இருக்கும். நொச்சி இலையை கம்புடன் கலந்து சேமித்தால், பூச்சி தாக்குதல் கட்டுப்படும்.

முதலில் கம்பை எடுத்துத் தண்ணீரில் ஊற வைக்கவும். ஊறிய பின்னர் தண்ணீரை வடித்து விட்டுப் பின்னர் அந்தக் கம்பைத் தூய்மையான துணியில் பரப்பி வைத்து விடவும்.

மேற்பரப்பிலுள்ள ஈரம் போன பின் கம்பை எடுத்து உரலில் இட்டு இலேசாகக் குத்தவும்.

அதில் உமி நீங்கியதும் அதை முறத்தில் இட்டுப் புடைக்கவும்.

பின்னர் மீண்டும் உரலிலிட்டு நன்கு குத்தவும். அதிலிருந்து பெரிய குருணை, சிறிய குருணை, மாவு ஆகியவற்றைத் தனித்தனியே பிரிக்கவும்.

பின்னர் அடுப்பில் உலை வைத்து முதலில் பெரிய குருணையை இட்டு வேக வைக்கவும். அது வேகக் கொஞ்சம் நேரம் அதிகமாகும். அது வெந்தபின் சிறிய குருணையை அதனுடன் சேர்த்துக் கலக்கி வேக வைக்கவும்.

அதுவும் வெந்தபின்னர் மாவினைப் போட்டுக் கலக்கவும். குறிப்பிட்ட பதத்திற்கு வெந்தபின்னர் அடுப்பை அணைத்துவிட்டுப் பாத்திரத்தை அப்படியே சிறிது நேரம் மூடிவைக்கவும். பின்பு கெட்டியாக ஆகிவிட்ட கம்பஞ் சோற்றினைக் கரண்டியில் எடுத்து உருண்டைகளாகத் தட்டில் இட்டு அதனுடன் குழம்பு, ரசம், மோர் சேர்த்து உண்ணலாம்.

மீதமாகி விட்டால் சிறுசிறு உருண்டைகளாக்கிப் பாத்திரத்திலிட்டு நல்ல நீரை ஊற்றி வைத்து விட்டால் இரண்டு நாட்களுக்குக் கெடாமல் இருக்கும். தொன்று



தொட்டுக் கம்பில் செய்யப்பட்டு வருவது கம்பஞ்சோறு ஆகும். கம்பங்கூழ், கம்பு ஊறவைத்த நீர் ஆகியவையும் கம்பின் பழைய உணவு வகைகள். கம்பில் தோசை, அடை ரொட்டி ஆகியவை செய்து சாப்பிடலாம்.

உடல் உஷ்ணமடைவதைக் குறைக்கிறது, வயிற்றுப்புண், மலச்சிக்கலை தவிர்க்க வல்லது.

கம்பில் ஊட்டச்சத்துக்கள் நிறைய இருக்கின்றது. கம்பங்கூழ் அல்லது சோறாக்கி தினமும் சாப்பிட்டு வந்தா, உடல்ல கெட்ட கொழுப்பு குறையும், உடல் வலிமையாகும்.

கம்புல வைட்டமின் A அதிகம் இருக்கறதால, தோல் ஆரோக்கியத்துக்கும், கண் பார்வைக்கும் நல்லது. இரத்த சோகையால பாதிக்கப்பட்டவங்க கம்பு சாப்பிட்டு வந்தா நல்ல பலன் கிடைக்கும்.

"நீரிழிவு பிரச்சனை இருக்கிறவங்க அரிசி உணவு அதிகமா சாப்பிடுறத தவிர்த்துட்டு, கம்பு

மாதிரியான சிறுதானியங்கள சாப்பிடுவது மூலமா உடலுக்கு நல்ல ஆற்றலைப் பெறலாம். கம்பு தொடர்ந்து சாப்பிட்டு வந்தா நோயெதிர்ப்பு சக்தி அதிகமாகும்."

"கம்புல நார்ச்சத்து அதிகம் இருக்குது, கொழுப்பு குறைவா இருக்குது. தினமும் ஒருவேளை உணவா கம்பை எடுத்துவந்தா உடல்ல இருக்கிற தேவையில்லாத கொழுப்பு கரைஞ்சு உடல் எடை குறையும்."

"செரிமானக் கோளாறு இருக்கறவங்க ஒருவேளை கம்பு உணவை எடுத்துவந்தா வயிறு சம்பந்தமான பிரச்சனை நீங்கி, செரிமானம் நல்லா நடக்கும். கம்புல நார்ச்சத்து அதிகமா இருக்கறதால மலச்சிக்கல் பிரச்சனை இருக்காது. குடலை சுத்தம் செய்யக்கூடிய கம்பு, குடல் புற்றுநேயை தடுக்கும்.

"கம்பை கூழாவோ கஞ்சியாவோ செஞ்சு, மோர் சேர்த்து குடித்து வந்தா, வெயில் காலத்துல உடல் உஷ்ணத்தைத் தணிக்க சிறப்பான ஒரு உணவா இது இருக்கும்."

சத்து நிறைந்த இந்த கம்பை நாம அளவுக்கு அதிகமா சாப்பிடாம, அளவோடு சாப்பிட்டு வந்தால் நல்லது. இரவு நேரங் கள்ல சாப்பிடாம காலை உணவா அல்லது மதிய உணவா எடுத்துக்கலாம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

கல்லா? கற்பூரமா?

இறைவன் பாபாவுக்கு நான் பல ஆண்டுகளாக பக்தர், நூறு முறைக்கு மேல் சீரடிக்குச் சென்றிருக்கிறேன். பல கோடியில் கோவில் கட்டியிருக்கிறேன். இன்ன இன்ன பதவிகள் வகித்திருக்கிறேன் என்பதெல்லாம் முக்கியமே இல்லை! இத்தனையும் பெற்ற பிறகும் மனப் பக்குவம் அடைந்திருக்கிறோமா என்பதே முக்கியம்! காரணம் ஆன்மீகத்திற்கு தகுதி என்பது பரிசுத்தமான இதயமும், மனப்பக்குவமும் மட்டுமே!



இத்தனை புற விஷயங்களும் நம்மை அகம் நோக்கி அழைத்துச்செல்லவில்லை எனில் அதனால் எந்த ஒரு ஆன்மீக நன்மையும் இல்லை! பாபாவிற்கு இதைப்போல் எந்த ஒரு சேவையும் செய்யாத ஒரு பாமரன் அவர் மேல் பரிபூரண பக்தியை மட்டுமே செலுத்தி ஆத்ம ஞானத்தை எளிதாக பெற்றுவிடுகிறான். காரணம் "நான்" என்ற அகந்தை அவனிடம் இல்லாததே காரணம்.

பாபாவிற்கு பெரிய அளவில் சேவை செய்ததாக பீற்றிக்கொள்வோருக்கு "நான்" என்ற அகந்தையே முன் நிற்கும்.

அகந்தையே ஆன்மீக முன்னேற்றத்துக் கான மாபெரும் தடை! படகு கிடைத்து விடுவதால் மட்டுமே யாரும் கரை வந்து சேர்ந்து விடுவதில்லை! துடுப்பு செலுத்தி நாமே பயணிக்க வேண்டும்!

ஆனால் நமது அகந்தை எண்ணமோ, ஓடும் படகையே ஒட்டைப் படகாக்குகிறது! இந்த லட்சணத்தில் நமக்கு நீச்சலும் தெரியாது! ஆகவே தான் நமக்குள் மூழ்குவதற்குப் பதிலாக மாயைக்குள் மூழ்கி விடுகிறோம்! ஆக இறைவனுடன் நெருங்கி இருப்பினும் அகந்தை இல்லாமல் இருப்பதே இறைவனின் அருகில் இருப்பதாகும். நெருப்பின் அருகே போனால் கற்பூரம் பற்றிக் கொள்ளும். கற்கள் எப்படிப் பற்றிக் கொள்ளும்?

தொடர் - 13

திருவருள் தேடி

சுந்தர்சாய்

எனதருமை சாய் அன்பர் களுக்கு சுந்தர் சாய் கரம் குவித்து சிரம் தாழ்த்தி வணக்கத்துடன் தொடர்கிறேன். சென்ற இதழில் சென்னை, தி. நகர், மோத்திலால் தெருவில் வசித்த திரு. அனந்த நாராயணன் என்ற முதிய ஜோசியர் எனக்கு ஒரு எலும்பிச்சை பழம் மந்திரம் ஜெபித்து கொடுத்தார் என்று சொன்னேனல்லவா?

அந்த பழத்தை எடுத்துக் கொண்டு ஹைதராபாத்திற்கு திருப் பினேன். ஒரு வாரத்தில் மும்பை அலுவலகத்தில் இருந்து அழைப்பு வந்தது. சிறிது குழப்பத் துடன், மந்திரம் செய்த எலுமிச்சம் பழத்துடன் அலுவலகம் சென்ற எனக்கு ஒரு வியப்பு காத்திருந்தது.

ஆம், என் மேலதிகாரியாக ஒரு தமிழர் அமர்ந்திருந்தார். அவர் எனக்கு நன்கு அறிமுகமானவர் என்பதே ஒரு சிறிய ஆறுதல். அவர் அறையில் நுழைந்து அறிமுகம் செய்தவுடன் அவரும் என்னை அடையாளம் கண்டு நன்கு உரையாடினார்,

இதற்கிடையில் அலுவலக மேனேஜிங் டைரக்டர் உதவியாளரி டமிருந்து அழைப்பு வர என்னையும் அழைத்துக் கொண்டு அவருடைய பார்வையாளர் சந்திப்பு அறைக்கு சென்று காத்திருந்தோம்.

சரியாக பத்து நிமிடங்களில் வந்தவர் எங்களிடம் கைகுலுக்



கியவுடன், என்னிடம் நேரடியாக பேசத் தொடங்கினார். என்னைப் பற்றியும், நான் வேலையில் சேர்ந்த தில் இருந்து என்னுடைய பணியில் என் பங்கு பற்றியும் பேசியவர் திடீரென்று என் கைகளைப் பிடித்து "வாழ்த்துக்கள்" என்றார்.

மேலும், உங்கள் வியாபார யுக்தி எங்களுக்கு மிகவும் திருப்திகரமாக இருப்பதால், ரூ 10,000 சம்பள உயர்வுடன் பதவி உயர்வும் அளிப்பதாகவும், மேலும் ஒரு கூடுதல் நாட்டிற்கும் என்னை பொறுப்பாளராக நியமித்து அங்கு இருக்கும் கிளையின் "ஜெனரல் டைரக்டர்" ஆக நியமன உத்தரவு தயார் செய்து அவரது கையொப்



பத்திற்கு அனுப்பும்படி உத்தரவு செய்தார்.

அது ஒரு இன்ப அதிர்ச்சி யாய் அமைய, அவரும் என்னிடம் "சந்தோஷம் தானே?" என்று கேட்டார். 'பர்சனல்' டிப்பார்ட் மென்ட் சென்று பதவி உயர்வு கடிதத்தைப் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தினார். நானும் மனதில் உடனே என் உயிரிலும் மேலான சாய் பகவானுக்கு நன்றி தெரி வித்து என் மேலதிகாரியுடன் அவரது அறைக்கு வந்து புதிய பதவி பற்றியும், தாஷ்கென்ட் என்ற அந்த கிளையைப் பற்றியும் பல முன்னோடியான தகவல்களை தெரிந்து கொண்டேன்.

நமது நாட்டின் முன்னாள் பிரதம மந்திரியாக இருந்த திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் தன் வாழ்நாளில் கடைசியாக ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்த இடம் தான் 'TASHKENT'. இப்படி யாக நமது அலுவலக மேல்நிலை ஆளுமையுடனான சந்திப்பு நம்முடையதான எதிர்பார்ப்புக்கு நேரெதிராக மிகவும் திருப்திகரமாக முடிவடைந்தது. வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நமது சத்குரு சாய் நமக்கு உறுதுணையாய் இருந்து வழி நடத்துகின்றார் என்ற நம்பிக்கை மேலும் மேலும் உறுதியாக அமைந்தது.

நமது சென்னை ஜோசியர் சொன்னபடியே நமக்கு அலுவல கத்தில் பாராட்டுக்கள் கிடைத்து பதவி உயர்வு, மற்றும் சம்பள உயர்வும் கிடைத்தது மகிழ்ச்சியுடன் ஹைதராபாத் திரும்பியதுடன் வீட்டிலும் கவலையுடன் காத்திருந்த குடும்பத்தினருக்கும் ஒரு நிம்மதி கிட்டியது.விடுமுறை நாட்களை நன்கு அனுபவித்து கர்ம பூமிக்கு திரும்ப வேண்டிய நேரம் வந்தது.

ஒருவித கனத்த மனதுடன் பெற்ற தாய், உற்ற மனைவி, இளம் சிறுவனாகிய மகனைப் பிரிந்து கிளம்பும் சமயம் நமக்குப் புலனான உண்மை இப்படித்தானே ஒவ்வொரு இராணுவ வீரரும் தங்கள் சந்தோஷம் மற்றும் உறவினரின் மகிழ்வு நாட்களை பணையம் வைத்து தாய் நாட்டைக் காக்க செல்கிறார்கள் என்பதே. அவர்களுடைய மனக்கவலைகளை நம்மில் எவ்வளவு பேர் நினைத்துப் பார்க்கிறோம்? நமக்கு நம்முடைய வாழ்க்கை மட்டுமே உலகளவு.

மிகவும் உயர்ந்த தன்னம்பிக்கை யுடன், பதவி, சம்பள உயர்வுடன் எனது வேலைக்குத் திரும்பி, வேலை நிமித்தமாய் அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதில் எமது கவனம் லயிக்க ஆரம்பித்தது. சாதாரண நிலைக்கு திரும்பியவுடன் எமக்கு

காத்திருக்கும் சவால்கள் என்ன என்பது புரிய ஆரம்பித்தது.

சவால் 1, தற்பொழுது நான் செய்து கொண்டிருக்கும் வேலையில் ஸ்திரத் தன்மையை நிலைநாட்ட வேண்டும். சவால் 2, எம்முடைய புதிய பதவிக்கு தாஷ்கென்ட் செல்ல விசா நானே தான் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அங்கே நான் செல்லும் பதவியில் ஏற்கனவே வேலையில் இருப்பவரை வேலை நீக்கம் செய்ய அலுவலகம் முடிவு செய்து அதை எவ்விதப் பிரச்சனையுமின்றி நிறைவேற்ற நம்மை நம்பியிருக்கிறது.

எனவே முன்னேற்பாடுகள் எல்லா வற்றையும் நானே செய்து கொள்ள வேண்டிய சூழ்நிலை. 'கத்தியின்றி இரத்தமின்றி' என்பது போல் நாம் சென்று பொறுப்புகளை கையகப்படுத்தி அங்குள்ளவரை பதவியிலிருந்து விடுவிக்க வேண்டிய பொறுப்பு நம்முடையது.

ஆனால் எமக்கு அந்த நாட்டில் வேறு யாரையுமே தெரியாது. இது ஒரு புதுவிதமான சவால். நாம் வரும்பொழுதே வெளியுறவுத் துறையில் முக்கியமான பதவியில் இருந்தவருடன் வந்ததால் இந்த நாட்டின் முக்கிய புள்ளிகளின் அறிமுகம் கிடைத்து சில இந்திய நண்பர்களும் கிடைத்தனர்.

முதலில் தாஷ்கென்ட் செல்ல மூன்று நாட்கள் மட்டும் தங்கும், 'டிரான்ஸிட் விசா' தான் கிடைத்தது. அதைப் போன்று இரண்டு விசாக்களை ஏற்பாடு செய்து தந்தார் ஒரு நண்பர். மொத்தம் ஆறு நாட்கள் தங்க லாம். ஆனாலும் மூன்று நாட்கள் முடியும் போது அந்த நாட்டின் எல்லையைத் தாண்டி மீண்டும் உள்ளே வரவேண்டும்.

மும்பையிலிருந்து நம் கிளை அலுவலகம் மற்றும் மருந்து தயாரிப்பு தொழிற்சாலை அங்கே இருந்ததால், எமக்கு பெரிதும் உதவியாய் இருந்தது. வெளிநாட்டுத் துறை மந்திரியின் மொபைல் எண், பெயர் எல்லாம் அனுப்பியிருந்தார்கள். அங்கு ஓர் இந்திய குடிமகன்



வருகிறார் என்றால், சுலபமாக மற்றவர்களுக்கு தெரிந்துவிடும்.

ஆனால் அது போன்று எந்த செய்தியும் வெளியே தெரியாதவாறு ஒரு ஹோட்டலில் ரூம் புக் செய்து நடுநிசியில் நடுங்கும் குளிரில் தாஷ்கென்ட் விமான நிலையம் வந்து இறங்கினேன். இடம் வலம் தெரியாமல் தனியே (சாயுடன் தான்) வெளியே வந்து ஒரு டாக்ஸி பிடித்து நான் ஏற்பாடு செய்திருந்த ஹோட்டலை அடைந்து, மும்பை அலுவலகத்திற்கு செய்தி அனுப்பி விட்டு காத்திருந்தேன்.

பகல் முழுவதும் ஹோட்டல் ரூமில் காத்திருந்தேன். சுமார் 2 மணியளவில் கார் வந்து அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றது. அங்கு பொறுப்பில் இருந்த நண்பர் மிகவும் கோபமாக இருந்ததுடன், இப்படி முன் அறிப்பில்லாமலும், முறையான விசா இல்லாமலும் நீங்கள் எப்படி வரலாமென்று என் மீது பாய்ந்தார்.

நான் நினைத்தால் உன்னை காவலர்கள் மூலம் கைது செய்து உள்ளே தள்ள முடியும் என்று பயமுறுத்தினார். அவருக்கு வேலையை விட்டு செல்வதாலும், முறையான விடையளிப்பு இல்லாததாலும் தான் அவர் கோபமடைகிறார் என்பதை நான் உணர்ந்தேன்.

எனவே அமைதியுடன், நான் அவரை பொறுப்புகளை முறையாக ஒப்படைக்கவும், அங்குள்ள வெளிநாட்டு ஊழியர்களிடம் ஒரு அறிமுகம் செய்ய மீட்டிங் ஏற்பாடு செய்யச் சொல்லி வற்புறுத்தினேன். அவரும் என் அமைதியான மற்றும் உறுதியான மனோதிடத்தைக் கண்டு சற்றே அமைதியானார்.

மேலும் அவரிடம் மும்பை அலுவலகம் தந்த பதவி உயர்வினாலும் மட்டும் நான் இங்கு வரவில்லை என்றும், என்னை இந்த வேலைக்கு அனுப்பிய 'சிலக்கூர் ஸ்ரீனிவாசர்' என்னுடன் எப்பொழுதும் இருக்கிறார் என்றவுடன், ஓர் அதிசயம் நிகழ்ந்தது. ஆம் உடனே அவர் என் கைகளைப் பற்றிக்கொண்டு நட்புடன் அவருடன் மதிய உணவிற்கு அவர் இல்லத்திற்கு வருமாறு அழைத்துச் சென்றார்.

அன்று அவர் தன் பிறந்தநாள் என்றும், தன் இஷ்ட தெய்வமும் 'பாலாஜி' தான் என்று சொல்லி என்னிடம் மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டு அங்குள்ள அலுவலக சூழ்நிலைகளையும், அவரைப் பற்றியும் பகிர்ந்து கொண்டார். என்னை பற்றி, மும்பை அதிகாரிகள் பெருமையாக பேசியதாகவும் தெரிவித்தார்.

"விசா பாலாஜி" என அறியப்பட்ட சிலக்கூர் பாலாஜியின் லீலையை அறிந்து மிகவும் வியப்பாக இருந்தது. அவர் பெயரைச் சொன்ன நொடியில் அங்குள்ள எதிர்மறையான சூழல் எப்படி மாறியது என்பதை இன்று நினைத்தாலும் மிகப்பெரிய ஆச்சரியம் தான். ஆம் அன்பர்களே... இறையன்பு துணையிருக்க நம்மை யாரால் என்ன செய்துவிட முடியும்?

நமது சாய்பாபா நமக்கு உணர்த்தவில்லையா? "நீங்கள் உலகில் எந்த மூலைக்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். நீங்கள் செய்வதனைத்தையும் நான் அறிவேன். உங்களுக்கு உறுதுணையாக நானிருப்பேன்" இது சத்திய வாக்கு.. பரம சத்யமான வாக்கு என்பதை நான் உணர்கிறேன். அதற்கு நானே சாட்சியாக விளங்குகிறேன்.

இவ்வாறாக நம் வாழ்வில் ஒரு புது திருப்பம் பதவி உயர்வு என்ற போர்வையில் நமது மன உறுதியை வலிமைப் படுத்த இறைவன் நம்மை அனுப்பிய கல்லூரி தான் "இந்த தாஷ்கென்ட் அனுபவம்"

தொடரும்.



பாபாவின் அதிசயத்தை தான் வியந்து பார்க்கிறோமே தவிர அதன் உள்ளே ஊடாடும் அன்பை நாம் தரிசிக்க தவறுகிறோம்! பாபா நிகழ்த்தும் செயலின் அடிநாதமே அன்புதானே!

நம்மால் பாபா போல் எந்த அதிசயத்தையாவது செய்ய முடியுமா? ஆனால் நம்மால் அன்பு செலுத்த முடியும்! அன்பைத் தான் பாபாவின் அனைத்து அதிசயங்களும் வெளிப் படுத்துக் கிறதே தவிர வேறு எந்த சுயநல நோக்கமும் பாபாவின் செயலில் இருக்காது!

பாபாவின் படத்தில் விபூதி வருகிறதா? பாபா அங்கே இருக்கிறார் என்கிறோம்! அப்படி யானால் விபூதி வராத வீட்டில் பாபா இல்லையா? ஆக நமது புரிதல் மீண்டும், மீண்டும் அதிசயத்தை நோக்கியே நகர்கிறது! எப்போது அது அன்பை சார்ந்து நகர்கிறதோ அப்போதே அது சுத்த ஆன்மீகத்தை நோக்கி நகர்கிறது என்று அர்த்தம்.

முதலில் நமது வீட்டு நபர்களிடம் அன்பு செலுத்த தொடங்குங்கள். ஏனெனில் அன்பு தான் மாபெரும் சேவை என்பது நமக்குப் புரியும் போது தான் உண்மையான ஆன்மீகம் நமக்குள் இயங்க ஆரம்பிக்கும்! எல்லா ஆன்மீக இயக்கத்தின் அஸ்திவாரமும் பாபாவே! அன்பே பிரதானம்!! அன்பை இழந்து விட்டால் ஆன்மீகம் தனது ஆன்மாவை இழந்து விடும்.

ஓம் சாய்ராம்.

நலமுடன் வாழ்வோம்



சாய் அன்பர்கள் அனைவருக்கும் வணக்கம்! நமது அன்றாட வாழ்வில் அல்லல்கள் அனேகம். கோடிப் பிரட்சனைகள் இருப்பினும் தீர்வு ஆன்மீக வாழ்வில் மட்டுமே உள்ளது. என்பது ஆண்டுகள் ஸ்தூல உடலுடன் வாழ்ந்து, இன்றளவும் நமக்கெல்லாம வழித்துனையாய் வலம்வரும் பிரபஞ்ச மகா சக்தி ஸ்ரீ சாயி மகராஜ் நமக்களித் ஓர் எளிய மகா மந்திரம்...

" ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

மிக எளிமையான இம்மந்திரத்தை எழுதிக்கொண்டே ஜபிப்போமானால் நம் தலையெழுத்தையே மாற்றி அமைக்க வல்லது.**'லிகித'** என்றால் எழுதுவது "இந்த லிகித நாம ஜபத்"தை தினமும் 108 முறை உச்சரித்துக் கொண்டே எழுதி, நம் கர்மவினையின் தாக்கத்தை முறியடிப்போம் வாரீர்.

ஆர்வத்துடனும், பக்தியுடனும், எழுத, எழுத பிரபஞ்ச மஹா சக்தியானது பேரருளாய் மலர்ந்து நம் வாழ்வினில் மன நிம்மதியையும், முன்னேற்றத்தையும் வழங்கும். என்றென்றும் குருவருள் திருவருளாய் திகழ்ந்திட சாயிநாமம் சொல்லிக் கொண்டே வாழ்வில் வளம் பெருவோம்

எக்கும் சாய்! எதிலும் சாய்!

எல்லாமே சாய்! குருவே துணை!

<u>விபரங்களுக்கு:</u>

"பாராயணப் பகலவன்"

திரு. சுந்தர்சாய், 9789404451

தொடர் - 36

சாய் சரவணன்


அதிதேவதை

நம் அன்னை இராதா கிருஷ்ணமாயி சாயியை ஸ்ரீ கிருஷ்ணனாக மட்டும் அல்ல, அனைத்து தெய்வங்களின் வடிவமாகவும் கண்டதால் பாபாவை ஸ்ரீ ராமனைப் போல, ஸ்ரீ கிருஷ்ணனைப் போல சதா பாவித்து ஒரு மஹாராஜனுக்கு உரிய சகலமும் இருக்க வேண்டும் எனவும், பாபாவை ராஜாதிராஜனாக அலங்கரித்து காண வேண்டும் என்பதெல்லாம் ஆயியின் கனவாய் இருந்தது.

அக்கனவு பலிக்கவும் செய்தது. இன்றைய ஷீரடியில் சாயிநாதரை ராஜாதி ராஜனாக, சிம்மாசனத்தில் அமர்ந்து சக்ரவர்த்தியைப் போல மிளிர்கிறார். இருப்பினும் நம் இராதாகிருஷ்ணமாயி சாவடி ஊர்வலத்திலும், பாபாவின் சேவையினிலும் மேலும் சில மாற்றங்களை உருவாக்க முயற்சி செய்து கொண்டே இருப்பாள்.

பாபாவின் அருளால் இத்தகைய நிகழ்வுகள் காண கிடைத்திருக்கின்றன. அனைத்திற்கும் மேலாக என் அன்னை ஸ்ரீ ராதாகிருஷ்ண மாயியின் கருணையைக் கண்டு அடியேன் ஆனந்தம் கொள்கிறேன்.

திரு. ராவ் பகதூர் மொரேச்வர் பிரதான் என்பவர் பாபாவின் மீது நம்பிக்கை அற்றவராக தான் இருந்தார். ஒருநாள் பிரதானின்



சகோதரர்கள் 14பேர் கொண்ட குழுவுடன் 1910ல் ஷீரடிக்கு சென்றனர். பாபாவின் பூர்ண ஆசியும் கிடைத்தது. அவர்களுக்கு சாவடி ஊர்வலத்தை காணும் பாக்கியமும் கிடைத்தது. ஆயியின் சிறந்த குருசேவைதனில் பங்கு கொள்ளவும் செய்தனர்.

பிறகு பாபாவின் சித்ரபடமும், தாஸ்கணு எழுதிய பக்தலீலாம்ருதம் 31அத்தியாயத்திலுள்ள பாபாவின் கதை கொண்ட நூலையும் பெற்றுக் கொண்டு ஷீரடியை விட்டுச் சென்றனர். ஊருக்கு திரும்பியவர்கள் பிரதானிடம் ஷீரடியில் நடந்த அனைத்து விஷயங்களையும் கூறி பாபாவின் பிரஸாதத்தையும் தந்தனர்.

பிரதான், சகோதரர்கள் கூறுவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு பாபாவின் தரிசனம் பெற ஷீரடிக்கு விரைந்தார். பாபா பிரதானிடம் பல லீலைகள் புரிந்து அவரை ஆட்கொண்டுவிட்டார்.

நாம் சாயி சத்சரிதையில் 38 வது அத்தியாயத்தில் (ஹண்டியில்) பாபா கொதிக்கின்ற கலனில் தன் கையை விட்டு சாதம் வெந்ததா என பார்த்தார் என்று படித்து இருப்போம். ஆனால் இந்த அரிதான நிகழ்வை பிரதான், பாபு சாந்த்தோர்கர், பாப்புவும் நேரில் காணும் பாக்யம் பெற்றவர்களாய் இருந்தனர்.

பாபாவின் அற்புதங்களை கண்ட பிரதான், அடிக்கடி ஷீரடிக்கு வந்தார். ஒருமுறை மதிய வேளைதனில் பாபா பிரதானையும், இரண்டு சிறுவர்களையும் மட்டும் அழைத்துக் கொண்டு லெண்டிக்குச் சென்றார். மதிய வேளையில் பாபா ஒருபோதும் வெளியே சென்றதில்லை.

ஆயினும் எதிர்காலத்தில் ஷீரடி சனஸ்தானில் முக்கிய பங்கு வகிக்கும் பாக்யம் பிரதானுக்கு உள்ளது என அறிந்த பாபா லெண்டியில் ஒரு குழியைத் தானாக தோண்டியப் பிறகு சில சோள விதைகளை பிரதானிடம் தந்து அக்குழியில் போட்டு மூடும்படி சொன்னார். பிரதானுக்கு ஒன்றும் புரியவில்லை ஆயினும் அமைதியாக இருந்தார்.

பிரதானுக்கு ஷீரடியில் ஸாடே, நூல்கர் என பல அடியவர்கள் நண்பர்கள் ஆனார்கள். பிரதான் பாபாவிற்கு ஒரு சிறப்பான விருந்தை அளிக்க எண்ணம் கொண்டார். அதுபற்றி பாபாவிடம் பேசி சம்மதமும் பெற்றார்.

மேலும் பாபாவிடமே விருந்தில் என்னென்ன உணவு பங்குபெற வேண்டும் எனவும், யார் யாரை விருந்திற்கு அழைக்க வேண்டும் எனக் கேட்டார். பாபா கூறினார் “விருந்தில் பூரண போளி இடம்பெற வேண்டும் எனவும், தாதா கேல்கரின் மருமகன் பாபு என்பவன் விருந்தினர்களில் ஒருவனாக கட்டாயம் இருக்க வேண்டும் எனவும், நானும் கலந்து கொள்வேன்” எனவும் கூறினார்.

பாபா குறிப்பிட்ட பாபு என்பவன் பாபாவால் பெரிதும் நேசிக்கப் பட்டவன். அவனது அந்திமகாலம் நெருங்குவதை அறிந்த பாபா, அவன் இறந்து புனர் ஜென்மம் எடுத்து பிரதான் அவர்களின் மனைவியின் கர்ப்பத்தில் வாசம் செய்து அவருடைய மகனாகப் பிறக்கப் போகும் பரம ரகசியத்தை பாபா சற்று மூடி மறைத்தார்.

இது பாபாவின் லீலையே! பிரதானுக்கு குழந்தை வேண்டும் என்ற கோரிக்கை இருந்தது. பாபாவின் இத்தகு லீலையில் இராதாகிருஷ்ணமாயிக்கும் பங்கு இருக்கவே செய்தது. பிரதானின் விருந்து உபசரணை நடத்தும் பொறுப்பு ஆயியிடமே ஒப்படைக்கப்பட்டது.

ஆயியியோ விருந்திற்கான சகலத்தையும் சரியாக செய்து முடித்தாள். பாபா கூறிய பூரண போளி உட்பட. ஆயியின் இருப் பிடத்தில் விருந்துக்கான ஏற்பாடு

செய்யப்பட்டன. பாபாவின் அடியவர்கள் சிலரும், தாதா கேல்கரின் மருமகன் பாபுவும் வந்தான்.



பிரதானும், பாபுவும் அடியவர்களும் அமர்ந்து விருந்தை உண்ண தயார் ஆனார்கள். அதே சமயம் பிரதானோ பாபா வருவதாய் கூறினாரே ஏன் வரவில்லை? என கேள்வி கேட்க, ஆயி கூறினாள் "பாபா எந்த ரூபத்திலும் வருவார்" எனக் கூற அப்போது காக்கை ஒன்று விருந்தில் வைக்கப்பட்ட போளியை தூக்கிச் சென்றது.

வந்தவர் பாபாவே என அனைவரும் உணர்ந்தனர். ஆயி பாபா காக்கை வடிவில வருவார் என்பதை முன்னறே உணர்ந்தும் இருந்தாள். பிறகு மனம் மகிழ பிரதானால் தரப்பட்ட விருந்து முடிவுப்பெற்றது.

அதுசமயம் பாபுவின் மீது தன் கருணை நிறைந்த பார்வையை செலுத்தி அவனது சிரஸில் தன் கரத்தை வைத்து தன் ஆசியை வழங்கினாள் ஆயி! பாபாவிற்கு தெரிந்த பரம ரகசியம் ஆயிக்கு வெட்ட வெளிச்சமாய் அறிந்தே! பிறகு அனைவரும் சாலாவை விட்டு அகன்றனர். சிறிது நாள் கழித்து பாபு இறந்து விட்டான். பிறகென்ன பாபு திரு. பிரதான் அவர்களின் மனைவியின் கர்ப்பத்தில் விழும்படி பாபா அருள்புரிந்தார்.

ஒருமுறை பிரதானும் அவரது மனைவியும் சீரடிக்கு வருகையில் பாபா பிரதானின் மனைவியை சுட்டிக்காட்டி "இவளே பாபுவின் தாயார்" என்று கூறினார். கபர்டே டைரியில் 7.12.1911 குறிப்பு உள்ளதைக் காணலாம். இந்த மாபெரும் லீலை எப்பேர்ப்பட்ட லீலை என்று நினைத்துப் பாருங்கள்.

எதையும் செய்யும் பரம் பொருள் நம் சத்குருநாதர். ஸ்ரீ சாயிநாதரின் தெய்வீக லீலைதனில் இராதாகிருஷ்ணமாயியின் எத்தகைய பங்குள்ளது என்று நாம் சிந்தித்தால் நன்கு புரியும் மாயக்கண்ணனே ஆன ஸ்ரீ சாயி நாதரின் மாய விளையாட்டு அவரது லீலா விநோதங்களில் கோடிக்கணக்கான பக்தர்களில் நாமும் ஒருவர் என்பதில் ஆனந்தம் அடைவோம்.

பிரதான் நம் ஆயியின் உயரிய சேவைதனைக் கண்டு வியந்து கூறியதாவது, பாபாவின் மாபெரும் மஹாபக்தை ஆயி, அவளது சேவை ஆச்சரியம் வாய்ந்தது என புகழ்ந்து உள்ளார். மேலும், இராதாகிருஷ்ணமாயி பிரதான் அவர்களுக்கு ஆன்மீக சம்பந்தமான கல்வியை போதித்துள்ளார். பாபாவின் மனம் அறிந்து செயல்படும் இராதாகிருஷ்ணமாயியின் குருசேவை தான் எத்தகைய உயர்ந்தது.

தொடரும்

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள்
அனைவருக்கும் பணிவான வணக்கம்!

வருகின்ற 11.7.2024 அன்று

நமது புத்தகத்தின் 7 ஆம் ஆண்டு விழாவினையும்,

73 வது புத்தக வெளியீட்டையும்,

ஆசிரியரின் "குருவை தேடி" புத்தக வெளியீட்டையும்,

மும்பெரும் விழாவாக

மிகச்சிறப்பாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதுசமயம் நமது இதழுக்கு, தங்களின் வாழ்த்து விளம்பரங்களை தந்து உதவி செய்யும்படி வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம். விழா சிறப்பாக நடைபெறவும், அன்னதானத்திற்கும் பக்தர்கள் காணிக்கை அளித்து உதவலாம்.

விளம்பர விபரங்களுக்கும்,
காணிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண், மற்றும் ஜி பே எண்:

9941816692

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம்

ஸ்ரீ முனுசாமி சித்தரின்

சீவ பீடத்தை தரிசிப்போம் வாருங்கள்.

சென்னை பல்லாவரம் அருகில் உள்ளது பிருங்கிமலை. காலத்தின் ஓட்டத்தில் தற்போது பரங்கிமலை என்று அழைக்கப் படுகின்றது. இந்த மலையில் தவம் இருந்தால் எவ்வளவு பெரிய சாபம் இருந்தாலும் நிவர்த்தி ஆகும் என்பது ஐதீகம் ஆகும். இதனால்தான் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சித்தர்கள் இங்கு வந்து தியானம் செய்வதை பெரும் பேறாக கருதி இருக்கின்றார்கள்.

அவர்களில் முனுசாமி சித்தரும் ஒருவர் இவர் சென்னையில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் என்று கூறப்படுகிறது.

முனுசாமி சித்தரின் ஜீவசமாதி பரங்கிமலையில் ஏதோ ஒரு பகுதியில் இருப்பதாக பலரும் கூறி வந்தனர். ஆனால் நீண்ட நாட்களாக அது கண்டுபிடிக்க முடியாதபடி இருந்தது.

சமீபத்தில் முனுசாமி சித்தர் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட அதிசயம் நிகழ்ந்துள்ளது. பரங்கிமலையில் உள்ள மாகாளி அம்மன் ஆலயத்தில் தனி



சன்னதியுடன் முனுசாமி சித்தர் இருப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக அந்த சன்னதியை பொதுமக்கள் என்ன சன்னதி என்று தெரியாமலேயே கும்பிட்டு வந்துள்ளனர்.

மொட்டை பிள்ளையார் என்று யாரோ ஒருவர் சொன்னதை நம்பி அந்த பெயரிலேயே வழிபாடுகளும் நடந்துள்ளது. ஆனால் அந்த சன்னதியில் சுமார் ஒன்றரை அடி விக்கிரகத்துடன் இருப்பவர்



முனுசாமி சித்தர் என்பது தெரிந்த தும், பலரும் ஆச்சரியமடைந்தனர்.

தற்போது முனுசாமி சித்தருக்கு ஒவ்வொரு நாளும் சிறப்பான பூஜைகள் நடத்தப்பட்டு வருகிறது. சென்னையில் இருந்து மட்டுமின்றி தமிழகம் முழுவதும் இருந்து சித்தர் ஆர்வலர்கள் அங்கு சென்று முனுசாமி சித்தரை வழிபட்டு வருகிறார்கள். முனுசாமி சித்தரின் ஜீவசமாதி என்று கருதப்படும் அந்தஇடம் மிக மிக சிறிய இடம்.

அந்த சிறிய சன்னதிக்குள் ஒரே ஒருவர் தான் நுழைய முடியும். அந்த ஒருவர் மட்டுமே அங்கு அமர்ந்து பூஜை செய்ய வசதி உள்ளது. வியாழக் கிழமைகளில் நிறைய பேர் வந்து வழிபட்டு செல்கிறார்கள். கார்த்திகை மாதம் முனுசாமி சித்த ருக்கு குருபூஜை நடத்துகிறார்கள்.

முனுசாமி சித்தர் சென்னை பாலவாக்கத்தை பூர்வீகமாக கொண் டவர் என்றும், அவர் வைத்தியராக இருந்தவர் என்று வாய் வழிச் செய்தி கள் கிடைக்கின்றன. ஆனால் அதற்கு எந்த ஆதாரமும் இல்லை. எப்படியோ முனுசாமி சித்தர் பரங்கி மலையில் வாழ்ந்தார் என்பது மட்டும் உறுதியாகி இருக்கிறது.

நூற்றுக்கணக்கான சித்தர்கள் வாழ்ந்த இந்த புண்ணிய மலையில் முனுசாமி சித்தரின் ஜீவசமாதி மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. மூர்த்தி சிறியதானாலும், கீர்த்தி பெரியது என்பார்களே அதுபோல இந்த சித்தரின் சன்னதி மிக மிக சிறியதாக இருந்தாலும், அருள் அலைகள் அடக்க முடியாத அளவுக்கு நிரம்பி வழிவது நிதர்சனமான உண்மையாகும்.

பூ, பழம் வைத்து நியாயமான கோரிக்கைகளை இவர் முன்பு சமர்ப்பித்தால் நிச்சயம் நிறைவேற்றி தருகிறார் என்பது முனுசாமி சித்தரின் சிறப்பாகும். நேரம் கிடைக்கும் போது பரங்கிமலைக்கு சென்றால் அந்த பலனை நீங்களும் பெற முடியும்.

சிவபெருமான் பிருங்கி முனிவருக்கு நந்திவடிவில் காட்சி கொடுத்ததால் அங்கு எழுப்பட்ட ஆலயம் நந்தீஸ்வரர் ஆலயம் என்று புகழ்பெற்றது. அது மட்டுமின்றி பிருங்கி முனிவர் அருள் அலைகள் இருந்ததால் அந்த மலையில் ஏராள மான சித்தர்கள் தவம் புரிந்தனர்.

தங்களது தவத்தால் சித்தர் ஆற்றலை பெற்றவர்கள் ஏராள மானோர் அந்த மலையிலேயே ஜீவ சமாதி ஆனார்கள். அந்த வகையில் நூற்றுக்கணக்கான சித்தர்கள் உறைந்த இடமாக அந்த மலை கருதப்படுகிறது. ஏராளமான

சித்தர் அங்கு ஆற்றல் பெற்ற பிறகு வேறு இடங்களுக்கு சென்று மக்களுக்கு சேவை செய்து ஜீவ சமாதி ஆகி இருக்கிறார்கள்.

சென்னையின் பல்வேறு பகுதிகளில் ஜீவ சமாதிகளில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சித்தர்களில் பலர் இந்த மலையில் தவம் இருந்து ஆற்றல் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈசனுக்காக உருவாக்கப்பட்ட ஆலயத்தை விஜயநகர மன்னர்களும், சோழ மன்னர்களும் திருப்பணிகள் செய்து மேம்படுத்தியதற்கான குறிப்புகளும், ஆதாரங்களும் உள்ளன.

ஆதணி என்ற சோழ மன்னன் இந்த மலையில் இருந்த சிவாலயத்துக்கு திருப்பணி செய்ததால் அருகில் உள்ள இடம் அவனது பெயரால் ஆதம்பாக்கம் என்று அழைக்கப்பட்டதாக சொல்கிறார்கள்.

பிருங்கி முனிவர் தவம் இருந்து ஆற்றல் பெற்றதால் அந்த மலை பிருங்கி மலை என்று அழைக்கப்பட்டு நாளடைவில் பேச்சு வழக்கில் பரங்கிமலை என்று ஆகிப்போனது. ஆனால் வெளி நாட்டவர்கள் வருகைக்கு பிறகு அந்த பெயரும் பறிபோனது.

1523ம் ஆண்டு போர்ச்சுக்கீசியர்கள் சென்னையை பிடித்த பிறகு இந்த மலையில் விரும்பி குடியேறினார்கள். இதனால் அந்த மலைக்கு செயின்ட் தாமஸ் மலை என்ற பெயரும் ஏற்பட்டது. 1910ம் ஆண்டுவரை இந்த மலை பிருங்கி மலை என்றே அழைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



பிருங்கி முனிவருக்கு சிவபெருமான் நந்தி வடிவில் காட்சி கொடுத்தார் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் தற்போதும் ஆதம்பாக்கத்தில் ஆவுடைய நாயகி சமேத நந்தீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. திருமண வரம் தரும் இந்த ஆலயத்தின் முகப்பில் பிருங்கி முனிவருக்கு ஈசன் காட்சி அளித்த ஆலயம் என்று பொறிக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

சீவசமாதி ஆலய முகவரி: ஸ்ரீ முனுசாமி சித்தர் ஆலயம், மேக்சின் ரோடு, மாகாளியம்மன் கோவில் உடபுறம், கலைஞர் நகர், பரங்கிமலை (மேற்கு) சென்னை 16.

பேரூந்து வழித்தடம்: சென்னை கோயம்பேடு- கிண்டி, கிண்டி- பூந்தமல்லி. இறங்குமிடம்; பரங்கிமலை மாதா கோவில் பேரூந்து நிறுத்தம்.

மின்சார வண்டி மார்க்கம்: சென்னை கோயம்பேடு மெட்ரோ - மீனம்பாக்கம். இறங்குமிடம்: கிண்டி மெட்ரோ

“குரு பூர்ணிமா”



ஓம் சாய்ராம்! ‘சாய் மகராஜ் குருவைத் தேடி’ வாசகர்களுக்கு சுந்தர் சாய் வணக்கத்துடன் “குரு பூர்ணிமா” நல் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஜூலை 21 ஆம் தேதி, ஞாயிறு ஆடிப் பௌர்ணமி மிகவும் உயர்ந்த விஷேசமான நாள்.

யுகங்களைக் கடந்து இந்த ஆடிப் பௌர்ணமி நன்னாள் மிக்க மகிழ்ச்சியுடன் கொண்டாடப் படுகிறது என்பதே ஓர் ஆச்சர்ய மல்லவா! நம் பூலோக வாழ்வில், சம்சார சாகரத்தில் கடல் கொந்தளிப்பு, சூறாவளிக்காற்று திமிங்கலகளுக்கு இடையே இருளில் பயணம் செய்யும் நம் ஒவ்வொரு வருக்கும் வழிகாட்டியாக, கலங் கரை விளக்காகத் திகழும் பேரொ ளியாகிய குருவைப் போற்றும் நன்னாள் இது.

மனித குல முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக பல யுகங்களைக் கடந்த ஆற்றலாகத் திகழும் வேதங் களைத் தொகுத்து எளிமைப் படுத்திய “வேத வியாசர்” என

சுந்தர் சாய்

அறியப்படும் வியாச பகவானை மரியாதை செய்யும் குரு பூர்ணிமா நன்னாள். “வியாசாய விஷ்ணு ரூபாய வியாச ரூபாய விஷ்ணவே” எனும் ரத்தின வாசகத்திற்கேற்றபடி நம்மைக் காக்கும் மஹா விஷ்ணுவே வேத வியாசகராக அவதரித்ததாக சொல்லப்படுகிறது.

இறை சக்தியே முப்பெரும் தொழிலாக படைத்தல், காத்தல், அழித்தல் எனப் போற்றப்படும் பிரபஞ்ச இயக்கத்தை வழிநடத்தும் பேருண்மையாய் விளங்குவது பரம சத்தியம். இம்மூன்றும் ஒன்றாகி, நன்றாகி நம்மை ஆட்கொண்டு, அணைத்துக் கொண்டு யாமிருக்க பயம் ஏன்? என அன்பு வெள்ளமாய் வழிந்தோடும் ரூபமாய் இன்றளவும் நம்முடன் பயணிக்கும் ஊக்க சக்தியே “குரு”

அந்தவகையில், ஸ்ரீ குரு தேவ தத்த” என்று அறியப்படும் ஸ்ரீ தத்தாத்ரேயர். இறைவனே குரு வடிவாய் உருமாற்றம் கொண்டு

இப்பூவுலகில் தோற்றம் செய்து நம்முள் விளங்கும் இறைசக்தியை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதால்,"ஸ்ரீ குரு தேவ" என அழைக்கப்படுகிறார்.

கு என்றால் இருள் (அறியாமை எனும் அகங்காரம்) ரு என்றால் நீக்குபவர்.

நம் ஒவ்வொருவருடைய அறியாமையின் அளவை எடை போட்டு, அதற்கேற்றபடியும் காலம், தேசம் என்ற வரையறைகளுக்குத் தகுந்த மாதிரியும் நம்மை வழிநடத்த இறைவனே பல அவதாரங்களை தோற்றுவித்து நம்மை இன்றளவும் வழிநடத்துவது மிகப்பெரிய ஆசிர் வாதமும், உத்தரவாதம் அல்லவா?

கலியுகத்தில் 1320 கி.பி.யில் ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபராக பிடாபுரம் தொடங்கி ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி, ஸ்ரீ அக்கல்கோட் ஸ்வாமி சமர்த்தர், ஸ்ரீ மாணிக்கப் பிரபு, ஷிர்டியில் சத்குரு ஸ்ரீ சாய் மகராஜ் எனப் பற்பல அவதாரங்கள்.

நாம் அறிந்த திருமூலர்,வடலூர் இராமலிங்க வள்ளலார், ஸ்ரீ சத்ய சாய் பகவான், ஸ்ரீ ரமண மகரிஷி, காஞ்சி மஹா பெரியவர், என தொடர்ச்சியாக வெவ்வேறு இடங் களில் வேறு வேறு தோற்றமானாலும் அவையெல்லாமே ஸ்ரீ குருதேவரின் பிரபஞ்ச சக்தியின் வெளிப்பாடே என அறிவதே 'தெளிவு'.

தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருவடி போற்றல்
தெளிவு குருவின் திருவாக்கு மந்திரம்
தெளிவு குருவருளின் மூலம் வீடுபேறு



என எல்லாமே குருவருள், குருவருளே எல்லாமுமாகி தெளிவதே ஞானம் என்றறியப்படும் பேருண்மை. குருவின் திருவடியில் சங்கமமாகாத இறைவடிவே இல்லையென்று தெளிந்து குருவிடம் பரிபூரண நம்பிக்கையுடன் அபார பொறுமை காத்தால் எட்டாக்கனி என்பதே இல்லையென்றாகும்.

நம்மைத் தேடி, நம் இல்லம் தேடி நம்மில் எவ்வித வேறுபாடும் பார்க்காது முழுமையாக நம்மை அரவணைக்கும் கருணைக் கடலே நம் ப்ரியமான சத்குரு சாய் மகராஜ் என்பது நம்மில் பலரது அனுபவமாய் இன்றளவும் திகழ்கிறதல்லவா?

அனைவருக்கும் அனைத்துமாய் அளவற்ற பெரும் கருணையாய் விளங்கும் குருவருள் பற்பல வடி வங்கள் எடுக்க வேண்டியிருப் பதுடன், நம்முடன் இவ்வாழ்வில் இன்றளவும் என்றென்றும் பயணிக்கும் பலரிடமிருந்து வெளிப் படுவதும் பிரபஞ்ச சக்தியின்

திடமான வெளிப்பாடே என்பதில் அய்யமில்லை

முன்பே குறிப்பிட்டபடி நாம் ஒவ்வொருவரும் பல பிறப்புகளின் கூட்டாக அடைந்திருக்கும் ஆன்மீக நிலையின் ஏற்றத் தாழ்வுகளின்படியே நம்மை வழிநடத்த குருவருள் சிலரைத் தேர்ந்தெடுத்து நம்மை அவர்களிடம் சேர்க்கிறது என்பது நம்மில் பலரது அனுபவ உண்மையே. அவர்களை நாம் அடையாளம் காண்பது கடினம் என்றாலும், முழு நம்பிக்கையுடன் உண்மையான ஆர்வத்துடன் நாம் அணுகும்போது நமக்கு தெளிவாக வழி கிட்டும் என்பதே சத்யம்.

நமது சாய் தியானாலயா ஆத்ம ஞான சபையின் அங்கத்தினர்களது அனுபவமும் இதையே வெளிப்படுத்தும். "தேடுதல்" என்பதே நமது லட்சியமாய் அமையும் பொழுது, நமது குருவும் நம்மை தேடிவருவார் என்பதே உண்மை. அது நிகழ்காலத்தில் நமது ஆசிரியர் "ஸ்ரீராம் குருவின்" வாழ்வில் நிகழ்ந்திருக்கின்றது. அந்த அனுபவத்தை உணர்த்தி நமக்கு வழி காட்டுவதே "சாய்மகராஜ் குருவைத் தேடி" இதழின் நோக்கமாகும்.



நாமனைவரும் ஒன்றாய்க் கூடும் இந்த ஞானவழி குருவருளின் மிக அற்புதமான ஏற்பாடு என்பதை உணர்ந்து, தெளிந்து, காலங்களை கடந்து போற்றப்படும் நன்னாளாகிய "குரு பூர்ணிமா" நாளில் நாமும் நம்முடன் பயணித்து நம்மை நன்கு வழிநடத்தும் நமது குருவிற்கு பணிவான வணக்கத்தை செலுத்த வேண்டியது நம் கடமையல்லவா?


நாம் எங்கிருந்தாலும், என்ன செய்து கொண்டிருந்தாலும், நன்றி மறவாது நம் முன் வாழும் குருவை வணங்கினால் ஸ்ரீ குரு தத்தாத்ரேயர் வாக்குப்படியே அந்த நமஸ்காரம் என்னையே வந்தடையும். நானும் உங்கள் குருவின் மூலமாக எனது ஆசிர்வாதத்தை உங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்குவேன் என அருளியிருக்கிறார்.

நாமும் வேத வியாசரில் தொடங்கி வழிவழியாய் வந்தருளும் அனைத்து குருமார்களின் திருவடிகளையும் வணங்கி மரியாதை செய்வதோடு, நம்மிடம் அன்பு காட்டி, நம்மோடே பயணிக்கும் ஆத்மார்த்தமான குருவிற்கு நமது "பாத நமஸ்காரம்" செய்து கமலத் திருவடிகளை போற்றுவோம், பற்றுவோம், இறுகப் பற்றுவோம்.

"குரு வாழ்க! குருவே துணை!"
"எல்லாம் சாயி! எல்லாமுமே சாயி!"

வாசகர் குரல்...

அமுத மொழி!... அது அற்புத மொழி...



ஆசிரியரின் சாய் சரிதம் மிகவும் அருமை. ஆங்காங்கே ஆசிரியரின் பஞ்ச் வசனங்கள் அற்புதம்.

- திருமதி.ஜெயசித்ரா, பொள்ளாச்சி.

நான் மெஹர் பாபாவின் பக்தன். "அவதார்"கட்டுரையை படித்தவுடன் அகமத்நகர் மெஹாரா பாத்திற்கு சென்று பாபாவை தரிசித்து வந்ததைப்போல் மனம் சிலிர்த்தது.

மிகவும் நன்றி அய்யா!

- திரு. ஜெகன்நாதன், முகப்பேர்.

ஆன்மீக வேஷம் ஒரு பக்க கட்டுரை என் மனதை வெகுவாய் பாதித்தது. அப்படியே கிழித்து எனது முகம் பார்க்கும் கண்ணாடியில் ஒட்டி வைத்திருக்கின்றேன். தினந்தோறும் படித்துக் கொள்வதற்காக.. உணர்வு, வெற்றி பெட்டிச்செய்திகள் சொல்லவே வார்த்தைகள் இல்லை. அவ்வளவு அருமை.

- திருமதி. லதா பாஸ்கரன், சென்னை

சாயி மகராஜ் குருவை தேடி இதழை ஆக்கித் தந்தமைக்காக, எனது குருஜி திரு.ஸ்ரீராம் சாய் அவர்களுக்கு கோடானுகோடி நமஸ்காரங்களை தெரிவித்துக் கொள்கிறேன். அமுதமொழி, அற்புத மொழி. அஹோபிலம் பயணக் கட்டுரையின் மூலம் நாங்களும் லட்சுமி நரசிம்மரின் தரிசனம் பெற்றோம். ஆன்மீக வேஷம் நல்ல படிப்பினை. வெற்றி, உணர்வு, ஆசிரியரின் ஆசி கிடைத்ததைப் போலிருந்தது. குரு நித்தியானந்தரின் கட்டுரை அருமை. மிக்க நன்றி சாய்ராம்.

- திருமதி. ப. இந்துமதி, அயனாவரம்.

அனைத்தும் அருமை சாய்ராம். எதைக்கூறுவது, எதை

விடுவது என்றே தெரியவில்லை. தொடரட்டும் உங்களது அற்புத மான சாயி பணி!

– திருமதி.நா.குமார், நெய்வேலி.

சாய்சரிதம் எளிமையான தமிழில் சரளமாக படிக்க முடிகின் றது. குழப்பம் எதுவுமின்றி கதை செல்கின்றது. மிகவும் நன்றி சுவாமி! பெட்டி செய்திகளை இரண்டாக குறைத்து விட்டீர்களே! பெட்டிச்செய்திகள் அனைத்தும் மிகவும் அருமையாக இருக்கிறது. பெட்டிச்செய்திகளை அதிகம் வெளியிடவும்.

– திரு.இரா. கிருஷ்ணாராவ், பழனி.

சாய்சரிதம், சாயிலீலா மிகவும் அருமை. அஹோபிலம் பயணக் கட்டுரை சிறப்பு. தொடர்ந்து பயணக் கட்டுரைகள் வெளியிடுங்கள். ஆவலோடு எதிர்பார்க் கிறோம்.

– திருமதி. சங்கீதா, போரூர்

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளில் இன்றைய நாளுக்குத் தேவையான சிறந்த சிந்தனைகள். நூற்றாண்டுகள் ஆகியும் இன்றும் அப்படியே பொருந்துகின்றன.

"என்னைத் தொடதே, நான் புனிதமானவன்" என்பதே நமது மதம். இதைவிட உங்களது புனி தத்தை வேறொருவர் தோலுரிக்க முடியாது! ஆச்சார சீலர்களுக்கு சவுக்கடி. சரியான சிந்தனையை தேர்ந்தெடுத்தற்காக ஆசிரியருக்கு பாராட்டுக்கள்.

– திரு. வேதகிரி, கும்பகோணம்.

சித்தர்களின் சீவசமாதி தரிசனம் சென்னையை விட்டு வெளியே வர மாட்டேன் என்கிறதே! சென்னைக்கு வெளியில் இருக்கும் சித்தர்களைப் பற்றியும் எழுதுங்கள் வெங்கடேசன் சார்.

– திரு. பிரபு, மதுரை.

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கும், தங்களுடைய சாய் மகராஜ் குருவை தேடி இதழின் ஜூன் மாத இதழை பார்க்க நேர்ந்தது. 71 வது இதழ் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். நான் இப்பொழுதுதான் பார்க்கிறேன். உங்கள் இதழ் ஏனைய ஆன்மீக இதழ்களுக்கு சற்றும் சளைத்ததில்லை. உங்கள் இதழ் நாடு முழுவதும் சென்று சேரும் படி ஆவண செய்யுங்கள். நன்றி!

– திரு. கிருஷ்ணன், சோழபுரம்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 9941816692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

Mrs.Neelam Kumar - Bangalore.Rs:4501

திரு. பாலகிருஷ்ணன்,அண்ணாநகர் ரூ.3000.

திருமதி. மீனாகுமாரி, சென்னை. ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.

திருமதி. பி. திருமலைச்செல்வி. கொளத்தூர். ரூ.1000.

Sri Sai Maharaj - chennai. Rs: 1000

திருமதி. சுப்புலட்சுமி மலையப்பன், நெல்லை. ரூ.1000

திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK. ரூ.700.

திருமதி. ஜெயசித்திரா, பொள்ளாச்சி, ரூ.550.

திருமதி.லதாபாபு. வேப்பம்பட்டு. ரூ.500.

எஸ். பார்வதி, சென்னை. ரூ.500

திருமதி பொன்முருகன் மகாலட்சுமி. மதுரை. ரூ.500.

திருமதி.சரண்யா வெங்கடேஷ், கொளத்தூர். ரூ.500.

திரு.கமலா அரவிந். வேளச்சேரி. ரூ.500.

திரு.சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500.

திருமதி. லலிதா,துரைப்பாக்கம். ரூ.500.

சாய் சங்கவி, சென்னை. ரூ.500

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திருமதி.நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி. ரூ.500.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திரு.கருணாமூர்த்தி.அயனாவரம். ரூ.400.

சாய்அர்ச்சனா.வி.ஆர். சென்னை. ரூ. 301.

திருமதி. பவித்ரா, கொளத்தூர். ரூ.300

திருமதி. உமா விஜய்ஆனந்த். அயனாவரம். ரூ.200

திருமதி.பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட்.கொளத்தூர். ரூ.200.

திருமதி.உமா முருகன் சின்னாளப்பட்டி. ரூ.200.

திரு.சூர்யாகுமார். கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.

திரு.எஸ்.பி.பாலசுப்பிரமணியன். சீரடி. ரூ.108.

ஸ்ரீ கணேஷ் கபே, வில்லிவாக்கம். ரூ.101

திருமதி.ராணி திவாகர். சின்னாளப்பட்டி. ரூ100.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர். அரிசி 1 மூ.

திருமதி. புவனா குடும்பத்தார். அயனாவரம். அரிசி. 1 மூ.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* **5 வருச சந்தா – ரூ.1000 (தபால் செலவு உள்பட)**
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர் 99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

- திரு. சம்பந்தம், ஸ்ரீரங்கம். ரூ.1000
- திருமதி. சாந்தி. மயிலாப்பூர். ரூ.500.
- திரு.சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500.
- திருமதி. இந்துமதி.அயனாவரம். ரூ.100
- திரு.வேணுகோபால்.நங்கநல்லூர். ரூ.100.
- திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர். ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068